உ

பரமபதி துணை.

ஸ்ரீ

சிவசுப்பிரமணியக் கடவுள்மீது

நூதன

சிருங்காரச் சந்தவர்ன மெட்டுகள்

அடங்கிய

பக்திரச கீதாமிர்த

சங்கீர்த்தனங்கள்.

இஃது

சாத்தூர்தாலூகா ரெட்டியர்க்கு மகா-ள-ள-ஸ்ரீ

குப்பாரெட்டியார் குமாரர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

இராமசாமிக்கவிராயரவர்கள்

இயற்றியதை

மதுரை வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

கலியாணசுந்தரம் பிள்ளையவர்களாற்

பிழையறப் பரிசோதித்து

மதுரை புக்ஷாப் பி. கா. சி. ஏஜண்டு

மு. கிருஷ்ணா பிள்ளையவர்களால்

திருமங்கலம் ஸ்ரீகிருஷ்ணா விலாஸம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] [அணா-4.



உ

பரமபதி துணை.

ஸ்ரீ

சிவசுப்பிரமணியக் கடவுள்மீது

நூதன சிருங்காரச் சந்தவர்ன மெட்டுகள்

அடங்கிய

பக்திரசகீதாமிர்த

சங்கீர்த்தனங்கள்,

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

தென்பரங்குன் றத்தில்வளர் தேசிகன்றன் சேவடியி
னன்புபெற நற்றந்த மியானைதற்—கும்பர்பிரா
னந்தனத்திற் கும்பமுனி நற்கரகநீர் கவிழ்த்தோன்
கந்தக் கழலிணையே காப்பு.

விருத்தம்.

(2) நாகமிசைத் துயில்மாலு மலரயனு
ஒண்மறையு நாளுந்தேடும்
நாகமிசை வளர்மதியோ டரவுநதி
கொன்றையணி நம்பன்மைந்த

ஞகமிசைக் கலைபொளிர்த்த நாரணன்றன்
மாமருகனால் வாப்செங்க
ஞகமிசைப் புகர்முகமுமைங்கரமு
முடையானை நாந்துதிப்பாம்.

ஜெயராமா என்றவர்ன மெட்டில் வேறு சந்தம்

(3) இராகம்—நாட்டை—தாளம்—ஆதி

பல்லவி.

ஆதிதேவா - அருள்புரி
ஆதிநின்ற சோதிநந்த நிதியே, (ஆ)

அநுபல்லவி.

ஓதினேன் யான் தினமுனை
உம்பர்யோகர்முத லிம்பராேனார் துதி (ஆ)

சரணம்.

பாதுகாவா பரமனே
பாரதக்கதையை மேருவெற்பில்வரை (ஆ)
சாதவாக வருவை நீ
தாசன்ராமசாமி தினம்பணி (ஆ)

கலைவாணி துதி.

(4) விருத்தம்

பொன்மருவு வெண்கமல மீதிலமர்
தேவிபெறும் போதஞான
வின்மருவு மதிநுதலி வீணையூற்
குண்டிகைப்புத் தகமுங்கொண்ட

நன்மருவுங் கரகமலநாயகி
பாரதியென்ற ஞவினின்று
நின்மருவுங் கருணைசுரந் தநிமதுரத்
தமிழருள்வாய் நித்தம் நீயே.

---

(5) ஆசிரிய விருத்தம்.

தென்னவன் பொதிகைவரை தனில்வள ரகத்தியன்
செஞ்சொன்மக ளாய்ப்பிறந்து.
செந்தமிழ்ச் சங்கத் திருப்பினி லிருந்துமுயர்
திருவைகை நதிதவழ்ந்தும்
மன்னவன் வழுதிநற் புகழிற் கிடந்து சிவ
மார்க்கமெங்குங்குலாவ
மறையுணரு ஞானசம் பந்தனுக் காய்த்தீயில்
வதிந்துவே காமனின்றும்
முன்னவன் விரிஞ்சனன் ஞவிலும் வெள்கமல
முகிழ்விலா மலர்மீதினு
முத்தமிழ்ப் பாவலர்க ளிதயகம லந்துள்வளர்
முண்டகா சனத்தி யெனையுந்
தன்னவ னெனக்கருதி வரமளித் தேயடிமை
தாலமதி லெந்நாளுந்
தங்கிமுத் தமிழ்மழை சொரிந்திடவு நல்வரந்
தந்திரட் சிப்பை நீயே.

கமலநயன சரஸ்வதியே என்ற வர்ன மெட்டு.

(6) இராகம்—கல்யாணி—தாளம்—ஆதி

பல்லவி.

கருணைமென்றனுக் கருள்புரிகுவாய் என்றன்
தாயே சரஸ்வதி நீயே தயவோடித் (கரு)

அநுபல்லவி.

சரணஞ் சரணம் பணிவேன்றனையே
தாளுவில் வதிந் தெனக்கு நீயே
தமிழ்மழை பொழிந் தருள் செய்வாயே
சங்கரற்றி ருப்பிருந்து
தங்கவைகை யிற்றவழ்ந்து
தங்கிவரை யிற்பொருந்துந்
தமிழ் முனிக் கமிழ்தெனு மகளோயித்(கரு)

வேதனிற்கங் கொண் டாடும் பாரி
விநோதக்கலைக் கிதக் காரி
வித்தகப் புத்தக பாணி ஒய் யாரி
வித்வவல்லோர் நாவில்மேவி
நித்தமக வாததேவி
பத்மமென்ன கமலப்பூவில்
பட்சமுடன்வரார் ரக்ஷிப்பாயித்(கரு)

நாவலர் தினந் துதிக்குந் தேவி
நானெழுத்திசை யறியேன் பாவி
ராமசாமியென் னுவில் மேவி

நற்றமிழை எனக்கீய்ந்து
குற்ற மொன்றில் லாமல்வாய்ந்து
பெற்றதாயென நீவாய்ந்தன்
பிள்ளையெனையடிமை கொள்ளவருவாயித் (தரு)

சோமசுந்தரக் கடவுள் துதி.

(7) ஆசிரிய விருத்தம்

சோதிமய மாகவொளி யிலகுபர மானந்த
சுவாமிநின் கோவிலழகுஞ்
சொர்னக்கொடுங்கைபொடுவன்னமுயர்கோபுரத்
தாவியின் னழகுமினது
பாதியுடல் பெற்றபரு வதராஜ புத்திரியெம்
பரமேட்டி மீனும்பிகை
பகர்வேத நாற்பத்து முக்கோணி கலியாணி
பரைவளர்ச னதியினழகும்
ஆதிமய னானுஞ்செ யற்கரிய மாடமது
மதினான்கு வாயிலழகு
மையனே யின்னதென நாவினாற் சொல்லவுப
ராதிசே டற்குமரிதே
நீதியா கப்பதஞ் சலிமுனிவர் தொழமன்றுள்
நின்றுநட மாடு சிவமே.
நித்தமுமெனக்கருள்செய் நின்மல சொரூபமே
நிகரிலா சோதிமயமே.

(8) அலைசேர்கடல்சூழலகில் என்றவர்ன மெட்டு
இராகம்—இந்துஸ்தான்—பியாக்—தாளம்—ஆதி

பல்லவி

திருமாமதுராபுரியிற் றிகழாய்வளர்சிவமணியே
செல்விமீனாக்ஷியுமைமால்கொள நால்வருமே மகிழ்கனியே

அநுபல்லவி.

ஸ்ரீமீ நாவோடுபர்மா மதிநதி யணிதிகழ்பரமே
நினுமடியர்மனகமலம தனவரதமுநனிநடமிடு (தி)

சரணங்கள்.

பெருமுப லகன்முது கினில் நிதம்
அருநடமதுபயில் கிரமனே
பித்தனே நித்தனே சுத்தனே அத்தனே
நித்தமெ னக்கருள்

அருமறைமுடி வினிலுறைதரு
கருணையினிறை வரதனேமிக
அஞ்சினேனோர் தஞ்சமின்றி
நெஞ்சயர்ந்தேன் வஞ்சமென்ன
கஞ்சபாத மஞ்சலென்று

தந்திடுவாய். (தி)

கரிமுறை யிடமுனம் வருள்புரி
அரிபிர மனுந்தரி விமலனே
சுந்தரனே மைந்த னெனப்புவனந்தரு
சந்திர சேகர

கருணமீதருள் புரிந்திடுநிற
ஹரஹரசிவ சிவசங்கர

சந்ததந்து திக்குமுந்தன்
மைந்தன்ராம சாமிதன்னை
இந்தவேளை வந்துகார்த்தி
டாய் சிவமே. (தி)

மீனாக்ஷியம்மன்றுதி.

(9) ஆசிரிய விருத்தம்

அன்னைபரி பூரணவி மலைகுமரி தென்கூட
லதில்வளர் கபாலிசூலி
யத்துவித மோனசுந் தரிவாலை கலியாணி
யபிராமி யிமையவல்லி
தன்னை நிகரொவ்வாத மலையத்து வசராஜ
தரணிபன் றனையைநீலி
சந்ததஞ் சோமசுந் தரனிடது பாகம்வளர்
சத்திசாம் பவிவராகி
முன்னையூழ் வினையான சஞ்சிதபி ராரத்வ
முழுதுந் தொலைத்துமானர்
மோகவலை யிற்சிக்கி யுழலாமல் னுபயபத
முளரிக டனைத்துதிக்க
என்னையுன் ருசர்கூட் டந்தன்னி லேசேர
வென்றுநீ யருள்வையம்மா
இனியதமிழ் ராமசா மியையாள மதுரைநக
ரிலங்குமீ னாட்சியுமையே.

இராகம்--டான்ஸ்-ரோட்டு பங்காளா--தாளம்-ஆதி

கண்ணிகள்.

(10) தென்மதுராபுரி தனில் வளரும் உமை
தேவிமனோன்மணி மீனாட்சி

நன்மலராசன மீதமர் சுந்தர
ராஜவிலக்ஷணா நாயகியே

நற்றவர்பணியும்வ ராகிவாலாம்பிகை
காரணியன்பர்கள் தாயகியே

நம்புமென் றன்பங்கன்
டன்புக்கொண் டின்பந் தருமுயர் (தெ)

ஜெகன்மோகனபஞ் சாட்சரிசங்கரி
தாயபிராமியே தற்பரையே

சாமளவர்ணம ஹேஸ்வரிருத்திர
சத்தியேசிவச டாட்சரியே

சங்கமே தங்குமோர்
பங்கமில் லக்கால் (தெ)

ககநகமெவன வொளி தருமணிமகுட
சடாலங்கிர்தபரி பூரணியே

ததிங்கணததிதோ மெனவுபர்நடமிடு
தாண்டவருளமகிழ் காரணியே

சந்தஞ்சேர் கந்தன்றன்
தந்தைக்கோர் சொந்தமெனவுயர் (தெ)

நதியுடன் மதியணி சுந்தரவீச நன்
ஞமன் மேனியி லோர்பங்கி
நாயகி திரிபுரை சுந்தரி புவனைமா
ராஜ ராஜேஸ்வரி மாதங்கி
ரக்ஷிப்பாய் வத்ஸல்யான்
பக்தத்தோ டக்ஷிக்கருணை செய் (தெ)

அதிமதுரத்தமிழ் ராமசாமியென்
னகமகலா துறை தவமித்ரி
யாமளமாமறை யோடெவரும்பணி
மாமலையத்வஜ வரபுத்ரி
அன்பன்யான் துன்பந்தீர்
தம்பநின் செம்பொன்னிணையடி (தெ)

திருமால் துதி.

ஆசிரிய விருத்தம்.

(11) வானவர்கடயரமது தீர்த்திட வயோத்தி நகர்
வந்த தசரத குமாரா
மாதவக் கௌசிகன் பின்சென்று தாடகையின்
வல்லுயிர்வதைத்த வீரா
கானமுறு குழலி சீதாதேவி வாழ்மிதிலை
கண்டரசன் முன்பு சென்று
கார்முகந் தன்னைநாணேற்றியக் கமலையைக்
கடிமணங் கொண்டராமா

தானவர்க் கரசெனும் ராவணனிலங்கை நகர்
தனிலெய்தி வில்லை வாங்கிச்
சமரமதி லிந்திரசித் தன்கும்ப கன்னனொடு
தசமுகனு மடிய வென்று
தேனமரு நன்மொழிச் சீதை சிறை நீக்கியத்
தென்னிலங்காபுரி யினைத்
திருவுயர்வி பீடணற் கீய்ந்தவா வென்னையுன்
சிந்தைவைத் தாளுவாயே.

---

(12) ஷாதுமான் என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி.

ஜெய ராமனேரவிகுல சோமனே ஹரி (ரா)
காதாகன்னிதா ரட்சிப்பாய்விநோதனே(ரவிகுல)

அநுபல்லவி.

சோமனைத்தரித்த தோகைபாகனுக் கருள்செய்
சுந்தரா சுந்தரா சுந்தரா சுந்தரா
சுத்தமி குத்தமேன் னத்தனே சுத்தனே
இத்தரை பத்தன கத்திநிதித்தருள் (ரா)

வாமனத்துருத் தரித்த மாதவா கார்மேக
வண்ணனே வண்ணனே வண்ணனே வண்ணனே
வந்தமுன் றுந்தமி நந்திடவுந்தியச்
சிந்துவிலந்தமி குந்தபந்தனஞ்செய் (ரா)

ராமசாமி தன்னைநீ யென்னாளுமே ரட்சிக்கும்
நாயகா நாயகா நாயகா நாயகா
நஞ்சினுமிஞ்சிய வஞ்சகநெஞ்சரைத்
துஞ்சவி டுஞ்சர ரஞ்சித மிஞ்சிய (ரா)

இந்நூலாசிரியர்வசிக்கும் கிராம தேவதையாகிய

(13) ஐயனார் துதி.

ஆசிரிய விருத்தம்.

கனகநிதி வளர்கின்ற செட்டியர்க ணகரில்வளர்
கருணைவா ரிதிய தான
கத்தனே யெத்தினமு நவமணி கனுறைகின்ற
கடலினுட் டோன்று நச்சுப்
பனகசய னத்தினிற் செய்ய கண் வளர் நேமி
பாணிக்கு முமையை வாம
பாகத்தில் வைத்தமமு வாளிக்கு மகனெனப்
பகர்கின்ற வேத முதல்வா
தினகர னெனச்சிந்தை தனினினையு மெய்யன்பர்
தீவினையெனுங்கங் குலைத்
தீர்த்திரட் சித்திடுஞ் செண்டாயுதா தினந்
தேவர்பணி யந்த ணாளா
வனமுளகு ளக்கரையுவந்தவா பூரணை
வரும்புட் கலைப்பெ ணிருவர்
மகிழ்பவா நமது நகர் வாழ்பவரும் யாமுநல்
வாழ்வுபெற வருளுவாயே.

---

(14) அம்மா மதுரை மீனாட்சி என்ற மெட்டு.

இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

கண்ணிகள்.

ஐயனெனப் பெயர்கொள் தேவா உன்ற
னைமையென்னைக் காவா நீவெள்ளை
யானையேறி வாவா
அமலாவருள் தாவா (எனதைய)

வையமுண்டவனருள் பாலா நிதம்
வாழ்த்தினேன்சு சீலா கிண்கிணி
வயங்குங்கண்டைக் காலா
மார்பினின் முந் நூலா. (எனதைய)

பூவினைப்புட்கங்க மேதா திருப்
பொன் வனசப் பாதா பூதலம்
போற்றும் பிரக் யாதா
புனிதாவருள் தாதா (எனதைய)

ஆனைவேயருட்கண் பாராய் மிக
அழகுயர் மூர் ச்சாரா என்னெதிரில்
அகமகிழ்ந்து சிராய்
அநுதினமும் வாராய் (எனதைய)

வாமமீதுக்க மோனா போரி கடல்
வண்ணானேர்த்தி ரேகி வானவர்
வணங்குந்தர்வ போகி
மந்திரி வேகி (எனதைய)

ராமசாமியெனுந் தாசன் தமிழ்
நாவலர்க்கு னேசன் ரெட்டியர்
நகரில் நாளும் வாசன்
நம்பிடுஞ்சர் வேசன் (எனதைய)

கூவல்நகர் சுந்தரானந்தர் துதி.
ஆசிரிய விருத்தம்.

(15) பொன்னுலவு கூவனகர் தன்னில் வளர்வேதாந்த
புனிதசற் குருபீடமே
பூரணச் சச்சிதா னந்தசிவ போகனே
பொன்னென்ன வொளிர் தேகனே
நன்னுதற் கண்ணரொடு சத்திசாம் பவிகௌரி
நாற்பத்து முக்கோண நன்
னடுவிட்டி லுறைமனோன் மணியுபய பாதமலர்
நாளுந் துதிக்கு நேமா
தன்னிகரில் போனகக் கொடி நாட்டி யேயமுத
தானமருள் கற்ப தருவே
தாரணியிலயோத்தி ரெட்டியர்கள் வங்கிஷந்
தனிலவ தரித்த மணியே
நின்றுடையபாதமலர்சென்னிமிசைவைத்துன்னை
நித்தந் துதிக்கு மெனைநீ
நேசமொடு காத்தருள்வை சுந்தரானந்தனென
நீணிலமுதிக்க குருவே

(16) திருமருவு சதுரகிரி சார்பிலுயர கூவனகர்
சேர்ந் தொளிர்ம டாதி பதியே

தெவிதிரி புராமனோன் மணிபூசை கைலேவளர்
தேவாதி தேவர் பூசை

பருடன் செய்துமுயர்பத்திதனில்மார்க்கண்ட
னுபவத ரித்த மணியே

அன்னாற்றுவசத்வத நாட்டியுல கோர்பசி
யகற்றிரட்சிக்கு மணியே

குருவெனவ போத்திரெட்டியர்குலம்விளங்கவரு
குறைவில்மா தவசிரேட்டா

கோதில்கா யாசநுத் திராட்சசடை முடியுடைக்
கோலமுயர் சிவவேடனே

பெருவர மெனக்கு நின்னடியார்க்கு முதவியாய்
பேரின்ப மௌனகுருவே

பேசரிய சுந்தரானந்தனென நாமமொடு
பேருலகுதித்தகுருவே

குயிலே எந்தன்மேலானக் கென்ன என்றவர்ன மெட்டு

(17) இராகம் மால் கோஷ் தாளம் சாப்பு.

பல்லவி.

வாமெதா தீ யெந்தன் முன்னம் வாராய் (வ)

அநுபல்லவி.

தருணமிதையா தவமிகுமெய்பா
தயவுசெய்துவாய் துதித்தேனென் பொய்பா (வ)

அரகராம்ப அருளிபம்பும்
அரிபதி நமா தவனே சுயம்பு (வ)

மாவளர் கூவல் வந்திடுந் தேவா
மகிமை நிறைகின்றவா வென்னைக்காவா (ஸ)
பாவலன்ராம சாமிபணிவேன்
பதமலர்களென் றலைமீதணிவேன் (வ)

(18) அவையடக்கம்.

வரகவியின் மழைபொழியு மௌவைமா தல்லால்
வாக்குக்கடாட்ச முள்ள
மாகவியு மல்லயிவ் வுலகினிற் பேர் பெற்ற
வல்லபுக ழேந்தி யல்ல
சிரகவிய தாம் ராம சரிதை செய் யுட்செய்த
தெய்வீக கம்பனல்ல
தினமுமோர் குருவிடம் சென்று வாக்குப் பெற்ற
தீதிலாச் சீட னல்ல
கரகமல வாமலக மென்ன வெக்கலையு முணர்
காளியின் றாசனல்ல
கல்லும்பிளக்கவசை சொல்லிடும் புலவனுங்
கவிகாள மேகமல்ல
விரதமிஞ் சியகுமர னருள் கொடென் வாக்கினால்
விளம்புமிப் புன் சொ லெல்லாம்
மேதினியிலுள்ள பெரி யோரகம கிழ்ந்திதனை
மிகவும் பொறுப்பர் மாதோ

ஸ்ரீ

சிவசுப்பிரமணியக் கடவுள் கீர்த்தனம்

(19) ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கடலாடை யுலகமதில் வாழ்கின்ற
ஜீவரைக் காக்க வென்று
செந்திநகர் தென்பரங் குன்றமே ரகமயிலை
தென்பழநி தணிகா சலம்
ஏர்கொண்ட சோலைமலை மயூரகிரி தோகை மலை
ஈசன்வளர் கைலை வேளூர்
எட்டிகுடி தென்கூடல் திருவருணை மேருகிரி
யியலான குமர கோட்டம்
கார்கொண்ட சென்னிமலை சிவகிரி விராலிமலை
கந்தமலை கதிரை போரூர்
கஞ்சமலர் மாதுலவு மேல வயல் தனிலும் வளர்
கந்தனே ராம சாமிப்
பேர்கொண்ட வடிவமை புகல்பக்தி ரசகீதப்
பெருப்பதனை நீயுவந்து
பிரியமொடு தமியனெனை யாள்வாய் பரங்கிரிப்
பெருமா னெனுங் குமரனே

---

(20) அம்மாமதுரை மீனாட்சி என்ற மெட்டு
இராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி
கண்ணிகள்.

திருச்செந்தூர் நகர்வாழ் முருகோனே உனைத்
தினந்துதித்தே மருகனே திருமால்

திவ்யமரு கோனே
தேவர்கள் தங் கோனே (செங்)

எனை வந்தாதரிப்பாய்மயிலின் மீது இன்றும்
வாது செய் பொன் றைது தெய்வானை
வள்ளியோடிப் போது
வரத் தாமத மேது (செங்)

தேக நிசாபரக்குன்றினில் வாசா சூர
நிந்த்ரன் மகள் நேசா புனிவா
னேற்றிடுஞ்சர் வேசா
எனது பவ நாசா (செங்)

உன்றன் தாசனென்னும் நாம சாமி சொல்லுங்
கண்டமிட்குக் காமி தாயாகுஞ்
சத்திவாலை வாமி
தருங்குமார சாமி

(21) மாமயிலேலனே மருவ என்ற வர்னமேட்டு.

இராகம் — தேசிகதோடி — தாளம்—ஆதி

பல்லவி.

வானவர்பணி பாமன் பாலா வேலா சம்பு
வானவர்க்குரைத்தமந்தரகோலா கலா நினம்(வா)

அநுபல்லவி.

தெய்வ யானைநறு மாதைநாளுங் கொஞ்சினேனேயன்றோர்
கானவ னெனவுமையல் மிஞ்சி னேனோ -வள்ளி
மானிடஞ்சென் றுமிகவுங்கெஞ்சி னேனோ -உயர்
வானமரமாக நின்று அஞ்சி னேனோ -தினம்.

மலர்—ஆரணனையே சிறையி லன்று அன்று செய்து
பூரணவன்பாற்புனத்திற் சென்று சென்று மது
மேர்த்தினிமாலைவாங்கி மென்று நின்று வெற்றித்
தாரணித்தாய் சூரரைமுன் கொன்றுகொன்று தினம்

உலைக்—கோரிவேனிராறுகண்ணுற் பாரும் பாரும் இந்தப்
பாரினிற்படுந்துயரைத் தீரும் தீரும் மோன
காரணசற்குரு பாதந் தாரும் தாரும் எந்தன்
சேரினில் மயிலின்மிசை வாரும் வாரும் தினம்

ருத்— பூமிபோற்றும் ரெட்டிநகர் வாசன் வாசன் தமிழ்ப்
பாமிகுந்த வல்லவர்க்கு நேசன் நேசன் ராம
சாமிதன்னை யேதுதிக்குந் தாசன் தாசன் பாடுந்
தேமிகுந்தமிட்கருளு மீசன் ஈசன் என

சிவஷண்முகா நின்னிருதாளெண்ணியே
என்றவர்ன மெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி தாளம்—ஆதி.

பல்லவி.

கந்தனே கங்கையருள் மைந்தனே காக்கவேணு
மெந்தனைக் கார்த்திகேயா உந்தனையே தொழுதேன் (கந்)

அநுபல்லவி.

சிந்தனைசெய்யுமீசா தென்பரங்குன்றில்வாசா
செந்திமா நகர்வள ரெந்தையே யாளுமிகப்
பந்தமா சத்தால்மிக நொந்தமே தேவனேநின்
சிந்தனைசெய் யாதமன வந்தனைசெய் யாதிருந்தேன் (கந்)

ஈசனே ஞானதேக நேசனே தென்பழநி
வாசனே யிந்திரன்மகள் நேசனே யான்வணங்கும் (ஈ)

ராஜராஜேஸ்பரியாள்நல் குங்குருபரனே
மோசத்தால் மோகமன நேசத்தால் மொழியும்விசு
வாசத்தால் மோதுங்காம பாசத்தாற் கெட்டழிந்துன்
தாசர்கள்தன் னேசவுபதேசமறந்தேன் பாவிநான் (கந்)

வேலனே வேதமந்த்ர மூலனே வேணியரன்
பாலனே விண்ணோர்க்கனு கூலனே விளங்கும்வடி(வே)

பாலன்ராமசாமி சொல் பாவுக்குவந்து முன்வில்
சீலனே நியசுரர் காலனே தெய்வயானை
லோலனே தேவிமகிழ் பாலனே யானுமிந்தத்
தாலமதி லேபிணியி னால்மெலிந்தேன் சந்ததமுங்(கந்)

திருச்செந்தூரில் வாழ்பவனே என்ற வர்ன மெட்டு.

(23) இராகம்—இந்துஸ்தான்தோடி தாளம்—ஆதி

கண்ணிகள்.

தென்பழநி மலையில்வளர் தேவாஷண்முகனே
கந்தையா தேவாஷண்முகனே (க-தே க-தே)

என்கவலை தீர்க்குமாமயி லேறிவாகுகனே
வேலாமயி லேறிவாகுகனே. (வே-லே வே-லே)

முன்கிரியைக் குடைப்பிடித்த முகுந்தன்மாமருகா
வேலவா முகுந்தன் மாமருகா (வே-மு வே-மு)

அன்பன்முறைகேட்டுவந்தெனை யாளுவாய் முருகா
எந்தனை யாளுவாய்முருகா (எ-யா எ-யா)

சந்தவரைதன்னில்வளர் தனிவை வேலவனே
கந்தையா தனிவை வேலவனே (க-த க-த)

அந்தரிமகோன் மணியா ளருளும் பாலனே
கந்தையா அருளும்பாலனே (க-அ க-அ)

சொந்தமென நம்பியுன்னைத் துதிசெய்தேன்முருகா
தினந்தினந் துதிசெய்தேன் முருகா (தி-து-தி-து)
நந்தகியுஞ் செங்கரனன் னாரணன்மருகா
திருமூரி நாரணன்மருகா (தி-நா-தி-நா)

காமனையெரித்தருள்முக் கண்ணுதல்மகனே
நெற்றிக் கண்ணுதல்மகனே (நெ-க-நெ-க)
பூமனைச்சிறையில்வைத்த புண்ணியாகுகனே
கந்தையா புண்ணியாகுகனே (க-பு-க-பு)

மாமதுரைத்தமிழ் மாலைசூடியவா
நறுமலர் மாலைசூடியவா (ந-மா-ந-மா)
ராமசாமிதன்னுளந்தனி லென்றும் நாடியவா
கந்தையா என்றும்நாடியவா (க-எ-க-எ

---

(24) பஹாரியாலா என்ற வர்ணமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

குமாரதேவா நினைக் கோரினேன்யானே (கு)

அநுபல்லவி.

உமாபதிக்கோர் தேசிகனாயுற்ற சீலனே
சமானமற்ற தேவ சேவ சக்தி பாலனே உயர்ந்த
வெற்றி வேலனே

சந்ததமுந்தனை சிந்தனை செய்தனன்
அந்தரதேவர்தி னந்துதிக்க (கு)

சரணங்கள்.

நாமமாயிரமுடையோன் மாமருகனே
தாமமாயவளிகடப்பந் தார் முருகனே பரங்குன்,
றூரருகனே
நஞ்சினு மிஞ்சிய வஞ்சகத்தானவர்
துஞ்சிட வேல்விடு ரஞ்சிதமேவுங் (கு)

ரூமசாமிபண்ணுவந்த நேம ஷண்முகா
பூமகன் றனைச் சிறை புகன்ற தேசிகா வள்ளிக்கு
தந்திடுந் சுகா
நந்துலவுந்திருச் செந்தில் வளர்திருக்
கந்தனென்று மெனை தெந்தையே நம்பி (கு)

இந்தவுடலை நம்பியிருக்கலாமா என்ற வர்ணமெட்டு.
(25) இராகம்—செஞ்சுருட்டி தாளம்—சாப்பு.

கண்ணிகள்.

செந்திநகர் வாழ் கந்தனென்றுந் தெய்வமே
அந்திபகலுமின்பே ரவாரந்துய்வோமே
சிந்தனைசெய்துபாடி வந்தனைசெய்தேன் கோடி
செந்திநகர்வாழ் கந்தனென்றுந்தெய்வமே (செ)

இந்திரனருள் சுந்தரியாள் மோகனே
வந்தெனையாளுவாய் நீவள்ளி பாகனே
தந்திமுகனார்தம்பி சுந்தரபாகம் நம்பி
சொந்தமெனவி ரும்பியேதோத்திரித்தேன் (செ)

பாமயின்மிசை நீ மகிழ் வாய் வருவாய்
தாமதமேனின்னங் கருணை தருவாய்
சோமசேகரன் பாலா நாமனேவடிவேலா
வாமமந்திர மூலாவரமருள்வாய் (செ)

ராமசாமிபணியும் நளின பாதா
பூமியிலென்மிடிதனைப் போக்கொன்றுதா
மாமதுராநந்தா வரமுமிகத்தாதா
சோமமுபரும் நீதா நிலம்புகழ் (செ)

பகவதிநித்யகல்யாணி என்ற வண்ணச்சந்த
(26) வர்னமெட்டில் பின்சந்தம்

இராகம்—மால்கோஷ் தாளம்—ஆதி

கண்ணிகள்.

அரனருள் புத்ரவி சாக யோகா
அழகுபர் சித்ரம யூர வாகா
அருமறையினிலுறை பரமகருணை நிறை
பரமுககுருபர ஞான யூகா
அந்தரிக் கோர் மைந்த னென்ன
வந்த கந்த விந்த வேலோ
அருள்தரவிது தருணமேயரி
மருகனேதிரு முருகனேவருகுவாய் (அ)

சார்தொழு முர்சித தோகை பாகா
சபகர புத்தம மோன நிகா

துரிதமுட னுல்கை யொருநிமிடமதனி
லுறுவலமிடவரு வோய்தியாகா

சுந்தரர்க்கு கந்துவிஞ்சை
மந்திரமி யம்புங்கந்த

துயருறமுன மயனேயேசிறை
யிடுபுயவல ஜெயவரதனேசம்பு (அ)

நிறைமணங் கமழ்மலர் மாலை நிபா
நிதஞ்சமர் விளைகொடுஞ் சூரர் கோபா

நிலவுதிகழுமுக மதியமுமருவுல
வுபவளவிதழவள் மோகபூபா

நீத்தமுந்த ஊத்துதிக்க
சித்தமெந்த னுக்கருள்வாய்

நேமமொடு ராமசாமி
பாடுந்தமிட் கேமகிழும்

நிந்தத்தோமென நிதந்தகி
தந்தித்தோமெனத்தா நடம்புரி (அ)

---

(27) ஷாதுமான் என்றமெட்டு

இராகம்—சிந்துபைரவி தாளம்—ஆதி

பல்லவி.

ஜெக—ஈசனே என்றன் குமரேசனே
ஏதன்மேல் வாதுசெய்
யாதரு ளாதியே (என்றன்கும)

அநுபல்லவி.

தாசர்க்கு கந்தநீத நற்கதி யளிக்குஞ்
சண்முகா சண்முகா சண்முகா சண்முகா

சாதுவே நின்புக ழோதினேன் நீநிலா
மாதுமைபாலவிப் போதெனைப்பாதுகா (வீ)

நதிமதியணிந்த வேணி நம்பனார் நுதற்கண்
வந்தவா வந்தவா வந்தவா வந்தவா

நாதனன்னிதவி ளேதபொற்பாதவர்
தாதரிபோதாப்ரக் யாதாவேதாஜெக (நீ)

அதி மதுர ரவித்வ ராம சாமி தன்னை
யாண்டவா ஆண்டவா ஆண்டவா ஆண்டவா

அந்தனே முத்தனே நித்தனேசுத்தனே
நித்தமுசுத்தினேன் பத்தனையாள் ஜெக (நீ)

---

(28) பூமிமேச்சிடும் என்ற வர்ன மெட்டு.

இராகம் — செஞ்சுருட்டி தாளம் — ஆதி

கண்ணிகள்.

செந்தின்மாநகரில் வந்தமோனகுரு
தேசிகா நிமவாதுகா தேவனேசுகா திருத்

தேவர் சேனைக்குயர் காவலாகவந்த
சேவகா ஆறு மாமுகா (செ)

அந்தி இந்து கொன்றை கங்கையணியரன்
பாலனே வடிவேலனே மந்த்ரமூலனே தின
மாதரித்துனது பாதபங்கயத்தை
ஐயனே நல்கு மெய்யனே

ஆவினங்குடியின் மேவுகின்றவெந்த
னத்தனே பரிசுத்தனே வேதமுத்தனே தெய்வ
யானையோடுவள்ளி மானைநாளுமுற்ற
அன்பனே யரு ளின்பனே.

பாவலனிராம சாமிபோற்றுங்கும
ரேசனே உபதேசனே ஜெகதீசனே உன்னைப்
பக்தியாய்த்துதித்தேன் முக்தரேற்றுங்கிரி
வாசனே குக தேசனே.

---

(29) ஆயேசையா என்ற வர்ண மெட்டு.

இராகம்—பியாக்—தாளம்—ஆதி.

பல்லவி.

கந்தநாதா கமலமலர்ப்பாதா
கருணைசெய் யொண்ணாதா

அநுபல்லவி.

சந்தவரைப்பதியில் வாசா உன்னைச்
சிந்தனை செய்தேன்ஜெக நேசா

தனிமயிலின் வாகா
வனிதைவள்ளி பாகா

தற்பரனுக் கற்புதமா
விற்பனமார் சற்குருவே (க)

சரணங்கள்

நந்தமணி மேனி விநோதா எனை
ரக்ஷித்தருள் புரிவாய் நிதா

நாரணன் மருகோனே
பூரண முருகோனே

நாதனே பொற் பாதனே நன்
னீதனே விச் சோதனையேன் (க)

பாசபந்தக்கடலில் வீழ்ந்து மிகப்
பாவியாகினேனையோ தாழ்ந்து

பாதவித்து நொந்தேன்
வாமுமிகத் தந்து

பக்தனையா ளுத்தமநன்
முத்தகினனு மத்தனேநீ (க)

தண்டமிழ்த் தாசன் ராமசாமி தன்னைத்
தற்காத்திடுந்த மாரசாமி

சாமியேவினை தீர்ப்பாய்
சேமா என்றமி யேர்ப்பாய்

சத்தியருள் புத்திரனே
சித்தமகிழ்ந் தித்ததியாள். (க)

(30) ஆசிரியவிருத்தம்.

அண்டர்சே னுபதி யெனத்தகும் பெயருடை
னஞ்சாத சூரர் செய்யு
மளவிலா வன்கொடுமை நீக்கியே தேவர்க
ளலக்கணை யகற்றி வைத்தாய்
பண்டுகுரு முனிவர்க்கு மோனமந் திரஞான
பாதம் பகர்ந்து வைத் தாய்
பரிதிபோ லொளிர்கின்ற வேல் கொண்டு கிரவுஞ்சம்
பலபிளவு படவெறிந்தாய்
கண்டுநிகர் மொழி வள்ளி குஞ்சரிச மேதவென்
கவலையைத் தீர்ப்பதரிதோ
கஞ்சனைச் சிறைசெய்த செஞ்சேவலங் கொடிக்
கத்தனே நித்தன் மகனே
தண்டாயு தக்கைய னேராம சாமியாந்
தாசனுக் கமரர்காணுத்
தரிசனந் தந்தாளு வாய்தென்ப ரங்கிரிச்
சரவணபவா னந்தனே.

மன்றுளாடியா என்ற வர்னமெட்டில்வேறுசந்தம்
இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ரூபகம்

பல்லவி.

ஆறுமா முகனே தேவா (ஆ)
நிறணியுஞ் சிவன்மகனே நித்தந் துதித்தேன் குகனே (ஆ)

அநுபல்லவி.

மாறுபடுவஞ்சச் சூரர்கள் மாளவே
வடிவேலெடுத்தவு டன் கோபமூளவே
வல்லசுரர்களொன் றும் வானுளவே
வந்தக்கிர முடனெய்தவா
வெந்தற்றிடும் படிசெய்தவா (ஆ)

தென்பரங்குன்றந கரினில் வாசனே
தெவிகுஞ் சரிவள் ளிமகிழ்நேசனே
திண்புயனே எனை யாளவே நேசனே
திருமாலினுக் கொருமருகனே
பெருமானெனை வருமுருகனே (ஆ)

அன்பனிராமசா மிதன்னையாண்டவா
அதிமதர்த்தமிட் பாமாலை பூண்டவா
ஐயனெனிக்கசித மாமயிற்றூண்டவா
அம்பிகையாள் பாலகனே
நம்பினென்பான் வேலவனே (ஆ)

மந்த்நகர்தந்தளமின்னே என்ற வர்ன மெட்டு

(32) இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்

கண்ணிகள்.

தென்பரங் குன்றத்தில் வாசனே திருமுகமெண்முன் மனமகி
சிக்கரம் உருவா யிசைனே தெய்வத் [ம்:ஞ]
திருவிளங்கிசை உருமாருருபா வரதசிவசரவணபவனே

தெய்வயானைவள்ளி பாகனேதேவர்சேனையின்காவலனேவி
சித்திரம யூரவாகனே (தெ)

அன்பர்காண மன்றுளாடுவோன் அதிபதியாய் நதிமதியு
மரவமுமுடியிற் சூடுவோன் றனக் [லக்ஷண]
கரியொருதசொற் பிரணவத்தினை யிருசெவிக்கருள் தருவி
ஆரணன்றன்னைச்சிறை செய்தாய் அசுரர்கள மிசைமடிய
அன்றயிலெறிந்தடி கொய்தாய் (தெ)

நாமமோராயிரமுடையான் நாகத்தின் மீது யோகத் துயில்
நாரணன் சக்கரப் படையான் விண்டு [கொள்]
நாதன்மருகனேயா தரித்தருள்நீதரத்தினமோதினேனெனை
ரக்ஷிக்குங் குமாரதேசிகாநம்பினேனையா தம்பமில்பொய்யா
நாளுமெனையாட் கொளுங்குகா. (தெ)

ராமசாமியாங்குண தேசன் நல்லவயோத்தி வல்ல ரெட்டி
நற்குலந்தன்னில்வரு நேசன் ரெட்டி [யர்]
நன்னகரமெனும் பொன்னகரமது கன்னல்மதுசிறை தன்னி
[கரில் பதி]
நாடொறுமதேநகர் வாசன் நந்தூர்வயல்சூழ் செந்தூர்முருக
னுதனைத் தினந்துதி தாசன் (தெ)

---

(33) வேலனே யிந்த வினையை என்றவர்ன மேட்டில் வேறுசந்தம்.

இராகம்—தேசிகதோடி தாளம்—ரூபகம்

பல்லவி.

முருகனேயிந்த மூடனையேன்படைத்தாய் அந்த
மோகவில்லை மாதர்களின் றேகந்தோய்ந்த வினையாகிய
மூடனையேன் படைத்தாய் (மு)

அநுபல்லவி

தருதுவாபேவராஞ் சண்முகா நீயென்று
சாற்றுமனு நின்னிருகாட் போற்றுதொழிலினைறகிய
மூடனைபேன் படைத்தாய். (மூ)

சரணங்கள்.

எந்தவேளையும் பொருளையே நினைந்து
கந்தனே நின்னைக் கருதாமன் மறந்து
சொந்தமான வுந்தன் றேண்டரைச்சினந்து
துதிபுரியா மானிடனன்
மதிதுறியா வினைறகிய (மூ)

செந்தமிழ்ராமசா மிகீதம் பாடினேன்
வந்தவுன் பாதம்வ ணங்காமலூடினேன்
பந்தத்தினல்மிக நொந்துமே வாடினேன்
பத்தியுட னித்தமுனை
நத்தா தொழி வினைறகிய (மூ)

கண்ணாயிரம் படைத்த என்ற வர்னமெட்டு.

(34) இராகம்—தேசிக முகாரி தாளம்—ஆதி

கண்ணிகள்.

நந்தார்வயல் சூழ்திருச் செந்தூர தனில் வளர்
நாதனே நின்னிரு பாதமே நம்பினேனுனுமே திரு
நாரணன் மாமரு காதுயர் தீர்த்தெனையாளுமே (ந)

கொங்நூர் திருப்பழநி வந்தாதரித்திடு மெய்க்
குருபரஷண்முக முருககுகாவருள் குழகனே-உயர்
குருகிரி தனில்வரு சரவணபவனெனுமழகனே (ந)

விண்ணூர் திருவருளை யண்ணாமலைச்சிகர
மீதுவிளங்கிய நாதனே என்துயர் தீர்த்திடாய்-மிளிர்
வேலனேநின்னருள் பாலித்துயர்கதிசேர்த்திடாய் (ந)

நண்ணூர் புரமெரிமுக் கண்ணன் மகிழுந்தேவ
நாயகியாளருள் சேயனேநின் றனைநாடினேன்-உன்றன்
ஞமப்பஜனைக ளாமெய்ப்பதமலர் சூடினேன் (ந)

ஈசாபரங்குன்றினில் வாசா யென்றனுக்கரு
ளேரகமெய்ப்பதி சேர் குமாரஜெகதீசனே-மயி
லேறுவிசாகனே கோருந்தெய்வானை தன்னேசனே (ந)

தாசன்ராமசாமிசொல் மாசில்பாமாலை யென்னுந்
தாரணியும் புய வீரனே நின்னருள் தாருமே-பிணி
தன்னையகற்றிட வன்னமயின் மிசை வாருமே (ந)

நான் சொன்னபடி கேளாய் என்றவர்னமேட்டு.

(35) இராகம்—தேசிகதோடி தாளம்—ஆதி.

பல்லவி.

வீர-சூரரின் சம்மாரா கண்பாராய் வாராய் யிந்த
நேரமேபணிந்தேனருள் தாராய்நேராய்-கொடுஞ் (சூ)

அநுபல்லவி.

காரை நிகர்த்தலே கண்டனருள் மகனே
சீரணி யுங்கடப்பந் தாரணியுங் குகனே (சூ)

சரணங்கள்.

தினம்-திருவருளாடகின் சேவை நம்பி
குருபாரபணிந்தேன் வினையாலே வெம்பி
தினமும் நைந்தேனுனது மனதிரங்காததேனோ
செந்தூர்நகர் வாழ் கந்தனேயானுன்
மைந்தனல்லவோ (கு)

மாதுமகேசன் மனைவியாள்தன் புத்திரனே
ஓதுமடியார்க் கொரு நன் மித்திரனே
வந்தேதினக்கொடிய சிந்தாகுலமதனை
மாற்றிடலாகாதா அதிசாற்றினேன் பொற்பாதா
வெள்ளைநீற்றணிந்தோய் சூதா (வி)

காமன்மருகனென்றுங் கானவனே
ராமசாமி பாடலுக்கு கந்தவனே
சந்நிதிமுன்னொருகால் முஞ்சச்செய்தோன்மருகா
கங்கைமகிழ்பவனே செங்கைவை வேலனே
அக்கமூர் நாலவனே (வி)

---

(36) தேக்குன்றாமோ என்றமெட்டு.

இராகம்—இந்துஸ்தான்தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

ஆறுமுகா கோரினேனுனையே
ஆறுமுகா ஆறுமுகா (ஆ)

அநுபல்லவி.

மாறியே நடித்தோன் மகனென வதிந்த
மாமயில் நடனனே வாழ்த்தி னேனருள்
வானவர் சேனாதிபனே (ஆ)

சரணங்கள்.

நாரணன் மகளை தூரல் செய்தவனே
நங்கைவள்ளி குஞ்சரி நாதனேமகிழ்
நம்பர்க்கருள் சம்ப்ரமனே. (ஆ)

தாரணிகடம்பா தகுந்தநற்சிலம்பா
தண்டமிட்கருளுஞ்சிவ தாரகாதினம்
தாசன் ராமசாமி துதி. (ஆ)

சேந்தின்மா நகரந்தனில் என்ற வர்னமெட்டு
(37) இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்

கண்ணிகள்.

தென்பராசலக் குன்றினில்மேவிய
தேவனெனுங்கும ரேசன் பந்த
பாவமகற்றுஞ்சர் வேசன் இளந்
திங்களோடியர் கங்கைபாந்திரு
பொங்கராவணி நங்குசெஞ்சடை
சேகரானந்த நாதன் செவிதனில்
சிந்தியங்குப தேசன் திருச்
செந்திலில்வாழ்முரு கேசன் (செ)

அல்பர்போற்றிடுந் தென்பழனுபுரி
யற்புதனும்வடி வேலன் சிவ
தற்பரையாளுமை பாலன் தினம்
அந்தரத்தவர் வந்துபோற்றிடும்
சுந்தரந்திக ழிந்திரன்தரு
அன்னையாந்தெய்வ யானைதன்னை நிதம்
ஆவலுடன் கொஞ்சுஞ் சிலன் தினைக்
காவிலலைந்தபொழ் காலன் (தெ)

சோமசேகரன் னேமமுடன்தந்த
குமரின் சம்மார நீதன் திரு
வேரகஞ் சேர்குக நாதன் தவத்
தொண்டரோடே னண்டர்போற்றிடுந்
தண்டபாணியென் பண்டைவல்வினை
துஞ்சவேததி செய்தருளுங்குக
வஞ்சமெலன்றுளும் பொற்பாதன் கிர
வுஞ்சனைக் கொல்பிர க்யாதன் (தெ)

ராமசாமித மிட்குதவுஞ்சுக
ரஞ்சிதமாமயில் வாகன் குழல்
மஞ்சுநிகர்வளி மோகன் வெய்ய
வஞ்சமேநிகர் வெஞ்சரோருக
வஞ்சதானவர் துஞ்சவேல்விடு
ராஜ ராஜ நல் லிச்வரியாள் தரு
நாயகனு மோன த்யாகன் அன்பர்
நாயகனுப்குனா வாகன் (தெ)

(38) செந்தூர்வாசா என்ற வர்ன மேட்டு.
இராகம்—பைரவி தாளம்—ரூபகம்

பல்லவி.

வந்தேகண்பார் மைந்தனெனை நீயுமே
மகிபாததியே சிகியார்பதியே (வந்)

அநுபல்லவி.

செந்தூர் நகர்வாழ் தேவதேவ
திருமயின்மிசை வருகுருபர
சரவணபவ கருணாநிதுவே (வந்)

சரணங்கள்.

வரநதியொடு பரசிவனுமை
பரைபகவதி தருபுதல்வனே
குரகதமென மயினடவுறு
கரமதிலயி லணிமுதல்வனே
சிரமதியணி யாரனுணாமுன்
வுரையதமுனந் தருகுமரனே
வரங்கள் தருந்தென் பரங்குன்றமரு
மரங்கன்மருக வுரங்கொள்மயின்மேல் (வ)

வாசவன்மக ளேசனேஜெக
திரனேகும ரேசனேகுக
தேசனேபவ ஞேசனேயுப
தேசனேமுரு கேசனேமிகு
நீசனிருதர் நாசனேகுன்றில்
வாசனேதே சுடரொளிரு

வடிவேற்கர வடியேன்பிணி
மிடிநீக்குமிப் படிமீதினில்
வாமமிகுநல் மாமரகத
மாமயின் மிசை நீமகிழ்வுடன்
வந்துகார்த்திடாய் சுதியிது
கந்த ராம சாமி தன்னை (வ)

பரமானந்த மெய்ப்பரங்குன்றேன் என்ற
மெட்டில் வேறுசந்தம்.

(39) இராகம்—தேசிக தோடி தாளம்—ஆதி

பல்லவி.

திருச்செந்தூர்வளருமுருகோனேதேம்பொழில்சூழுஞ்

அநுபல்லவி. (செ)

சந்திர சேகர ஞாருள் பாலா
தானவர் மாளவிடுஞ் சுடர் வேலா
இந்திரனின்றமெய் வானையின் லீலா
என்று நல்வானவ ருக்கநு கூலா (செ)

சரணம்.

கானவனென்ன ரூபங்கொண்டு கானதிலுற்ற
மான் மகள் வள்ளியை முன்கண்டு மனதில் மிகத்
தானே சகியாமையல் கொண்டு சரசவின்பக்
கானரசப்பதங்கள் விண்டு வள்ளியைநோக்கி
காரிகையேமதி சேரடி நீ யெந்த
ஊரடி யாது நின் பேரு—உந்தனைமிகக்

காதலுடன் புலி மீதுப யின்றிடு
தாதையர் யாரதைக் கூறுசொர்ன மேகுறக்

கன்னிகை யன்னமே என்றனை யன்னிய
னென்னநீ யெண்ணுமற் சேரு நீவாறுலக

கந்தரு வப்பெணோ இந்திரன் பெண்டோநற்
செந்திரு வோ அடியாரு சகிபேனினி

கஞ்சமாமல ரஞ்சமாமுக வஞ்சியே நினை
தஞ்சமென்றுவர் தேனே மிகவொநாந்தேனே

பஞ்சபாணன தஞ்சுமாமலர் நெஞ்சினிற்பட
வஞ்சினேனே செந்தேனே நேடிவந்தேனே

நஞ்செனும்விழி யஞ்செனக்கடை மிஞ்சியேமிகச்
சஞ்சலத்தொடுநானே தெண்டஞ்செய்வேனே

வஞ்சம் வேண்டாம் பஞ்சணையிற் கொஞ்சிட
ரஞ்சிதாகத் தோடி—கல்யாணிபாடி

வாலையேயிச் சோலைதன்னிற் சிலமுடனேவரிய
நூல்முறையாய்ச் சேரவிங்கு ஜால மென்ன
காலமிது வாடி—மதியனிந்த

ஆலமுண்ட நீலகண்டன் பாலன்வடி வேலன் மேவிந்
தாலமதி லேபதஞ்சொல் சீலன் ராம
சாமிநபம் பாடி—சேர்வதற்கிங்கு

இன்னமுந் தாமத மென்னடி வள்ளியாம்
கன்னியே நீயென்னை நன்வய
மாய்மாலை சூட்டு—மன்மதனென்றும்

கன்னல்ம தப்பயல் பின்னிட நின்னிரு
வன்னத னத்தட மென்றுயர்
மார்பினிற் பூட்டு-அடிமாதேளன்
ரிந்தவி தம்பல மொந்துதி ரிந்துயர்
செந்தினைக் காத்திடுஞ் சுந்தரி
யாங்குற மானை-மும்மதமுறு
தந்திமு கம்பெறு மொந்தையி னுலதி
சுந்தரமாகமணந்துஅணைந்திடுவோனேஎழிதல்மிகுந்த
சுத்தமிகு தென்பரங்குன் றத்தினில் மிகுந்தமரர்
நிந்தமுவலம்புரிந்தெங் சந்தனே எனத்துதித்துப்
பந்தியாய்த்திருப்புகழ் படித்துமே முழக்கிடுநற்
பன்னிருப்புயாசலனே நன்னகரமான திருச் (செ)

---

(40) பாரும்பரங்குன்றேனே என்ற வர்னமெட்டு
வேறுசந்தம்

இராகம் பியாக் தாளம் ஆதி

பல்லவி.

வாருமயிலின் மீது ஓடி வாருமயிலின் மீது
வள்ளிதெய்வ யானையோடு (வா)

அநுபல்லவி.

மகபதிக் கொரு மருகனேகுரு
பசவனைதுக வருமுகவர
வாலயருள் பாலகனே காலனணுகாமலென்முன் (வா)

செங்கையில் வேலுடைச் சேவகனே
மங்கைதெய் வானை மகிழ் பவனே
திருநதியாவணிபரமனுக் கரும்பிரணவமதுசொலுந்திர
சீக்கிரமென்பாவவினைநீக்கி யேகண்ணோக்கியென்முன்
பாசபந்தத்தி னலே நொந்தேனே
நேசமிகுத்தெனை யாள் சீமானே
பகலவனொளிதனை நிகரிழை யணிவளிசுகவருள்புரிசிறு
பாலன்ராம சாமிக்கனு கூலவடி வேலவனே (வா)

---

(41) ஆசிரிய விருத்தம்.

மதியேது கதிரேது மண்ணேது விண்ணேது
வல்லவே தங்களேது
மறையோது நான்முகன் கரியவனு மேது மழை
வானவின் னோறு மேது
பதியேது கதியேது பாதாள மேதைந்து
பஞ்சபூ தங்களேது
பாவபுண்ணிய மேது சொர்க்கநர கமுமேது
பகர் சாஸ்திரங்களேது
விதியேது மதியேது ஜீவர்க ளொடுக்கமும்
விரிவான தோற்றமேது
வேலுடைக் கடவுளே பக்தகோ டிகளை நீ
விரும்பியா ளாதிருந்தால்
நதிவேணி யன்பால னேசண்ட னென்றுமந்
நமனேலை வரு முன்னமே

ராமசா மிபையாரு வாய் பரங் கிரியிலெந்
நாளும் வளர் குமர தேவே

அம்மாமதுரை பீருட்சி என்ற வர்ன மேட்டில்
ஈரடிச் சந்தம்

(42) இராகம் ரேசிகம்-தாளம்-ஆதி

கண்ணிகள். [வா நல்

தென்பரங் குன்றத்தில்மிக வன்புடனென்னாளும்வளர்தே
வன்பர்கடன்றும்பமறுத்தின்பந்தர வாவா
நன்பரமன் பாலா வெனைக் காவா
நின்பத நீ தாவா (தெ)

வம்பவிழுங் கூந்தலுடை யம்பிகையகமகிழும் பாலா நீ
தம்பமென நம்பினேன் யாளும் பர்பணி சிலா
கும்பமுனிக்கின்பவரு கூலா
சமபினேன்யான் வேலா (தெ)

நாமன்மருகா கடப்பந் தாமணியுங்குகசர்வேசா மோக
காமினியுன் மாமனைபூமி சொற்பர காசா
நாமதல்லருணைகிரி நேசா
வாமவேகு கேசா (தெ)

மாமயிலின் மீது வந்து நீமகிழ்வினோடு வரந்தாதா நற்
பூமனொரு ருமினொமுன் சேமஞ்செய்வி ரோதா
ராமசாமிராமன்பணி பாதா
பாமதர கீதா (தெ)

மாத்தாடபாரதேனெ என்றமெட்டில் பின்மகுடம்

(43) இராகம்—கமாசு தாளம்—ரூபகம்

பல்லவி.

தோத்திரஞ் செய்து வேனே
தொண்டருன் முனே (தோ)

அநுபல்லவி.

நேத்திரமாறிரண்டால்நீயருள்வாயெங்கோனே(தோ)

சரணங்கள்

ஆத்திமதியணியும் அம்பலவன் மகனே
பார்த்திருந்தும்பிணியைத் தீர்த்திடாதென்குகனே (தோ)
ஆதிபிரணவ மாதிநாளொரு
பாதியார்க்குமு ணேதிடுங்குரு
வானவாமயில் வானவாவன்றோர்
கானவனெனப் போனவாநினே (தோ)

செந்தூர்ப்பதியில் வாசா தெய்வானை வள்ளிநேசா
சிந்திப்பவர்கள் முன்னஞ் செய்திடும்பவ நாசா
செந்தமிட்கரு டந்தனடியரின்
பந்தமற்றிட வந்தளித்திடுஞ்
சீலனே சிவன் பாலனே சூரர்
காலனேவடி வேலனேயுனைத் (தோ)

மைந்தனும் ராமசாமி சந்ததமுந்துதிக்கு
செந்தமிழ்க்குநின்னருள் தந்திடுவாய்கந்தனே
வாசவன்பகை நாசமாகிட
மோசமேமிகு நீச தானவா
வரமும் வஞ்சர்த முரமுநீள்முடிச்
சிரமுமறவயில் கரமெடுத்தவா (தோ)

மருகேலா என்ற வர்னமெட்டு.

(44) இராகம்—சுருட்டி—தாளம்—ஆதி

பல்லவி.

கருணைசெய்வாய் நீஷண்முக (கரு)

அநுபல்லவி.

அருணகிரிக்கத் தருணமுதவுந்
திருமால் மருகா வருவாய் சமையம் (கரு)

சரணங்கள்.

சேமமாயபனைச் செய்ததேசிகனே
செந்திநகர் தன்னில் வந்திடுங்குகனே
சோமனைச்சடையில் சூட்டிஞென்றன்பாலா
சூரிட்டமுற்றும் வேரறுத்த வேலா (கரு)

வாமமாமயின்மேல் வந்தருளிப்போது
வஞ்சகமிதேது வழுத்துவாய் சாது
தாமரைமலரை தனைநிகர்பாதா
தாசன்ராமசாமி தனைக்காக்கொணாதா (கரு)

தோலினே ஜேஸின பூஜா என்றவர்னமெட்டு

(45) இராகம்—பங்காளம் தாளம்—ஆதி

பல்லவி.

தணிகாசல மேவிய சண்முக நாதா
தருணா மெனக்கருள் தரலாகாதா

அநுபல்லவி.

வனிதாதிருமால் மருகா முருகா
வாமரகதமயின் மீதருள் தருக (த)

சரணங்கள்.

பணிமானணிவார் பானருள் பாலா
பன்னவர்வின்னவர் பணியும்பொற்காலா
அணிசேர் மார்பதி லழகொளிர் நூலா
அசுரர் குலம்வே றறவென்ற வேலா (த)

மதுரகவிபு னையும் ராமசாமி
வழுத்திய கீதத்தி லேமிகு காமி
புதுமலர் மாலைபு னைந்திடும்நேமி
போற்றுவர் வானவர் புகலுமிப் பூமி (த)

ஷாதுமான் என்றவர்ன மெட்டில் வேறு சந்தம்

(46) இராகம்—தேசிகதோடி தாளம்—ஆதி

பல்லவி.

வடி-வேலனே வேத மந் த்ரமூலனே
வேண்டினே னென்னையா ளாண்டவனே தில்லைத்
தாண்டவன்பாம்பணி பூண்டவன் பாலனே(வே)

அநுபல்லவி.

வாலையருள்மகனே நாலுணர்ஷண்முகனே
வந்து வானோர்தி னந்தொழுந்திருச்
செந்தில் வாழுயர் கந்தனே ஞான (வே)

சரணங்கள்.

தாலமீதேதழைபடும்சங்கடந்தன்னைத்தவிர்த்
தாதிருவரு ளாதரவில்லை
யாதலால்வரத் தீதென்ன புகல் (வே)

பாலனும் ராமசாமி பாடுந்தமிட்கு நேமி
பரமனே மோன வாரகனே குறச்
சிறுமிமகிழு அறுமுகவடி (வே)

(47) ஆசிரியவிருத்தம்

சந்தாச லப்பதியில் வளர்குமர குருபரா
சண்முகா நற்கடப்பந்
தாமமணி யுங்காங்க யாகார்த்தி கேயனே
சரவணபவா முருகனே
எந்தாயெ னுங்குழக நின்னுபய பாதத்தை
யெனதுமன திற் பதித்தே
இருவாட் சி பிச்சிமல ரலருச் சனைபுரிந்
தென்றுந் துதிக்குமெனை நீ
வந்தாளநின் மன துவந்தேதக சிந்திடா
வகையென்ன மோவறிகி லேன்
மாயன்மரு காமிக்க நேயமிகல் கயவரும்
வசை சொல்லி யேசி டாரோ
செந்தாம ரைப்பாத னேராம சாமியைச்
சிக்கிர தன்னி லாள்வாய்
தென்பரங் கிரிதன்னி லன்புமிக மேவிவளர்
தேசிகா குமரேசனே

ஞானா நாலே நாலே என்றவர்ளமேட்டில் பின்மகுடம்

(48) இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி

பல்லவி

சேந்தா வாரண ஈசா தேவாதியர் தினக் கதிபரங்கிரி
சேர்மு ருகேசனே திருமக ளார் மருகேசனே (சே)

அநுபல்லவி.

அந்திகையோ டாடரவ மணிந்தோன்றன் பாலனே
அன்றசுரர் சேனைவென்ற ஆறுமுக வேலனே
அரக்கரின்குல வருத்தமதனை
யறுத்துமயின்மே லிருக்குந்திருச் (செ)

சரணங்கள்.

தாமநற்க டம்பமணி ஷண்முகாசர் வேசனே
கருணைமுன்றன்கருணை செய்வாய் சாமிபவ நாசனே
சாதுவே என்துய ரோதினேன் நின்மல
நீ தவருபதனை யாதரிவேலவ (செ)

மாமதுர ராமசாமி பாமலரை யேற்றவா
வந்தென து சிந்தையுளி ருந்தெனைக்கண்பார்த்தவா
வாரும் வரமிகுத் தாருங்கள் பாருமே
யூருமயின் மிசை நேரினில் வரு (செ)

தாத்திமி என்றுடினுர் சதாஎன்ற வர்ன மெட்டு
இராகம்—தோடி தாளம்—சாப்பு (49)

பல்லவி.

வாகத்திமி யென் றுடமயின்மேல்
மதிபுனைசிவ னுதவியசுதா (வா)

அநுபல்லவி.

வரபருர் வரமருள் சேயனே
பாருணர் வுற வுரை வாயனே
வஞ்சதானவர் மாளவென்ற வேலவனே (வா)

சரணங்கள்.

சத்திபபிரவி யுத்தமியாள் பாலா
சந்தமுந்துதி செய்வேன் வடிவேலா
பத்தியதாய்ப்பணி பத்தரக்கனு கூலா
பாவைவள்ளி தெய்வ யானைமகிழ் சீலா

பாண்டவர்ச காயனென்றும்
ஆண்டவன்றன் மாமருகா
பதமே பருள் நிதமே

பந்தபாசத் தால் மிகவும்
நொந்துமேவ ருந்துமென்முன் (வா)

அத்திமுகன் றம்பி யானகுகேசனே
அருணகிரியையன் றுளநன்னேசனே
சித்திபருள் தென்ப ரங்குன்றில் வாசனே
சிந்தித்தவர்க்கருள் செய்ஜெக தீசனே

செந்தில் நகர் தன்னில் வளர்
கந்தநாத னேவானோர்கள்
கிரை நிக்கியகுமரா

தேவ தேவ ஷண்முகனே
சேவலங்கொ டிக்குகனே (வா)

சாகசவர்ந் திடும் வேசையர் நேசம்
கருதியுழன்றே னவருப தேசம்
நேசமுடனவ ரில்லதே வாசம்
நிதமும் புரிந்தே னினையெல்லாம் நிசம்

நீலவிழி மாதர் மீது
மால் கொளாத கற்றிப்போது
நிதமேமலர்ப் பதமே
நித்தமும னித்திடாய்நல்
லத்திமுகன் றம்பியே நீ (வா)

தாசனெனும் ராம சாமிக்கருள்சீலா
தண்டமிழோர் துதி சாற்றுமந்த்ர மூலா
மாசில் பழநி மலேயில் வளர் வேலா
மகிமையுறுஞ் சைவ மார்க்கர்க்கனு கூலா
மாதுபாக னுர்க்குமுன்ன
மோதிடுங் குருவே யின்னம்
வ்ாது செய்வதேது நீ
மந்திரச டாட்சரனே
பந்தமகற் றும்வரனே (வா)

இராகம்—தோடி தாளம்—ரூபகம் (50)

பல்லவி.

கந்த நாயகனே யுனதிரு
கடிகமழ்பத முடிமிசையணி
யடியவன்றுதி படி மிசைநனி
கனமது ரத்தமிழுக்கு நின்
மனமது வித்தினமகிழ்பவ (க)

அநுபல்லவி

செந்தமிழ்முனிக் குபதேசித்தவா
சிறுவன் ராமசாமி தன்னை நேசித்தவா
கந்தனே என்னிலக லகன் வாசித்தவா
கார்த்கேயனே பிணியால் நொந்தேன்
தாங்கமுடி யாமனலிந்தேன்
கங்கை பா லகனே தீர்த்திடாய்
செங்கை வேலவனே கார்த்திடாய்
கங்கையோ டம்புலிசெஞ்சடை
செங்கையில் மான்மழுவாம் படை
தங்கிய சங்கர னிங்கித
மங்கள மைந்தனே விங்கருள் (௧)

தென்பரங்குன்றில் வளர் சீமானே
சேவை தந்தென்னை யாளுங் கோமானே
முன்பாறுக் குரை மொழியும் பூமானே
மூஷிகவாகன னநுசனே
மாசிலாமோன சர்வேசனே
முற்றிலும் யான் செய்திருந்த
குற்ற நீக்கு வாய்பொருந்த
சூரறரி மருகா வாரும்
சிங்காரி முருகா நேரும்
முக்திதா சக்தி யகத்திரா
பத்தியாய்ப்பித்தமும் நத்தினேன் (௨)

வாரா யேனையனைய என்ற வர்ன மெட்டு
இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஆதி (51)

கண்ணிகள்.

ஈசா பரங்குன்றினில் வாசா விந்திரன்மகள்
நேசா வெனதுபவ நாசா
என்றன்முன் வந்தருள்கந்தனே சந்தவரை (ஈ)

தாசர்க்கருள் புரியும் னேசாசங்கரற்குப
தேசா சமையம் விசு வாசா
தருணமேயருண்மிகுங் குருவேநற்கருணைசெய் (ஈ)

கந்தா கடும்பகைக டிந்தாய் கௌரிதரு
மைந்தா கருது மெனை வந்தாள்
கதியருளிது தருவிதி தனைச் சிறையிடும் (ஈ)

சந்தாசலம் வளரு மெந்தாய் ராமசாமி
சிந்தாகுலந்தவிர்க்கும் விந்தா
சமரனே யிமையவெற் புமைமகிழ் குமரனே (ஈ)

வேலாவிமலனருள் பாலா ஞானமறை
மூலா விணோர் பணியுஞ் சீலா
விரிகடற் றரணியையொரு நொடிவலம்வரும் (ஈ)

ஞானதேசிகா என்ற வர்ன மெட்டு.
இராகம்—இந்துஸ்தான்தோடி தாளம்—சாப்பு (52)

பல்லவி.

தேசிகாகுமரா ஓம் சிவ சரவண

அநுபல்லவி.

வாசிசிலேயுணர் மாதவர் மௌனியர் போற்றிய (தே)

சரணங்கள்.

ஈசருக்குப தேசஞ் செய்தவா
தாசருக்கிடர் தன்னைக் கொய்தவா
ஏரகநற் கிரிவாசனே
கிரௌஞ்சயாண்டருள் நேசனே (தே)

அருணைகிரிக்கோர் துணையதானவா
கருணைவள்ளியை யணையுங்கானவா
அன்றய னைச்சிறைசெய்தவ
குன்றுருவிட வயிலெய்தவ (தே)

சோமவேணிய னருளும் பாலனே
தாமநற்கடம்பணியும் வேலனே
சோலைமலையில் வளர்முருகனே
வேலையில்துயில் வோன்மருகனே (தே)

ராமசாமிபா மாலை வேய்ந்தவா
நேம நற்றுதி நித்தம் வாய்ந்தவா
கந்தா தொளிர் மயில் வாகனே
கந்தாகுற வளி பாகனே (தே)

ஆசிரிய விருத்தம் (53)

பண்டலகை வசமான சிரன்கவிக்கு நீ
பருப்பதந் தனை யிருத்தப்

பட்சமுட னண்டி ரட்சிக்கவில்லையா முன்பு
பாரமலை மீதிலேறிக்
கொண்டருள நினைவுற்ற வருணகிரி முன்வந்து
கோதிலா வரமளித்துக்
குவலய மெலாரீயு மவனுநன் பாமென்று
கூறிடச் செய்ய விலையா
அண்டர்கோ சொர்க்காதி பதவியும் பொபெரபீ
யவன்றுயர் தவிர்க்க விலையா
ஐயனே யெற்கறிவு தந்துகாத் திட நினு
லாகாத தோ முருகனே
தொண்டனெனு ராமசா மிக்குற்ற ரோவைத்
தொலைத்துச் சுகத்தை யருள்வாய்
சுபசோப னங்கணிறை யுறுபரங் குன்றில்வளர்
சுவாமி குமரேச மணியே

தையலே சையோகஞ் செய்யாவிடில் என்ற
வர்ன மேட்டு.

இராகம்—தோடி தாளம்—ஆதி. (54)

பல்லவி.

செந்தி நகர் வளர் கந்நாதனிரு
செய்யபாத கஞ்சமே துதித்
துய்வாய்நிதம் நெஞ்சமே

அநுபல்லவி.

அந்திமதி தும்பை கங்கையணி சடை
ஆதிசிவன்பால சோதிக்கதிர் வேல

ஞதிருப்போற் காரனும் அன்ப
னன சடாட்சரனும் (செ)

நோகை மயில் வாகன் சுரகுஞ்சரிபாகன்
சூர்குலமுற்றும் வேரறுத்த தேவ
சுப்ரமண்ய முருகன் அதி
விற்பன மால் மருகன் (செ)

வானைசூடுஞ் சோதி வானோர்சேனபதி
மாதுமையாள் சேயன்பாதுகாக்கும்நேயன்
மாமணிநற் றேரினன் ராம
சாமி போற்றுந் தாளினன் (செ)

புதிய டான்ஸ் நோட்டு வர்ன மெட்டு
இராகம்—பங்காளா தாளம்—ஆதி (55)

பல்லவி.

மரகத விகசித மயில் வாகா
வள்ளிதெய் வானையர் மகிழ் மோகா (ம)

அநுபல்லவி.

சூரத மெனவிடை மீது வருங்
கொன்றை யணிந்தவ னன்று தருஞ்
சோலைப்பழ னுபுரி வாசா
கூறுமடியர் முற்பவ நாசா
குருபரனேயா திருகரனே
கும்பமுனிக் குபதேசா வந்தருள் (ம)

தந்தைக் கரு மறை யுறை வாயா
சத்திமனோன் மணி யருள் சேயா
சந்தனமொரு புழு கணிபுயவீரா
தானவர் கெடவயில் விடுமதிகாரா
சந்ததமு முன்றனையே
சிந்தனையாய்த் துதி சேயனெனக்கருள் (ம)

அலைகடல் துயில் திரு மால் மருகா
அருள்செய விதுதகி குகமுருகா
அன்றயனைச்சிறை வைத்திடு தேவா
அடியன்முன் மயின்மிசையனுதினம்வாவா
ஆரணனே பூரணனே
வாரண மாமுகன் மகிழனுசா திரு (ம)

சிவசெந்திற் பதிவளர் குக நாதா
செந்தாமரை மலர் நிகரிருபாதா
செந்தமிழ் ராம சாமிக்கருள் தாதா
தினஞ்சிரகிரி தனில் வளர் நீதா
சேய னெனக் காயபிணி
தீர்த்தருள் வாய் திருவருணை நகருறை (ம)

---

(56) திருப்பரங்குன்றம்.

தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன-தனதானு

மறந்தடக்கிரு [illegible]பன வளைவயனி
ரயிக்கைசயக்கி[illegible]ரழ தனமதை
மறைத்[illegible]ராழ வியுவிட—முயல்வார்மேல்

வளைக்க[illegible]கரழி பலகில
வுரைப்[illegible]ர்கள் மயல் கொள
மருட்[illegible]ழல் முடிவர்கள்—முகமீதே

விதற்[illegible]வர்க கெடருவினி
[illegible]வர்கள் கடிகையின்
[illegible]ரவர் —செயுமாலால்

[illegible] டரு பொரு
[illegible] முதலிய பவிநாவி
[illegible] தருபவர் செயுமயல்—தனிவாமே

கறக்கொடுத்தனைல் விழி வழி பொழுது
வரட்டி வர்றிடு ரமினவோ ரடி தனி
வளைக்களைர்தனின்விழவுறைநசிவளருள்-முருகேசனே

கரக்குரக்குரன் மகிமொரடு வரவின
கனைக்குரோட னடுவலின பணிமதி
தரித்திடச்சடையின் மருவியசிகுதர்கள்—இனியோடே

சிறைத்தரைத்துடன் திரைவினில் மகிழ்வொடு
ரார்க்குவழிபான் மணிமுடி முடிபுனை
நிறத்தரத்துள வணிபுய னிதிரு —மருகோனே

சிறக்குமங்குலி ஞெலிகட லொலி யென
தினத்தினம்பெரு முரசொலி மருவிய
திருப்பரங்கிரி தனிலுறை சரவண —பெருமாளே

---

(57) திருச்செந்தூர்.

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன—தனதான

கதிக்குங் கோலுட னேயிக லேபுரி
மருட்டும் வாள்விழி யால்வளை யாலிரு
கனச்செம் போவெனு மாதனமால் முக—மதியாலே

கரத்தந் தாவள மானடை யாலா
வெனத்தந் தாமென வாழிடை யான்மது
கரக்கும்பான்மொழி யால்மன மார்வுறு—குழலாலே

விதிக்குங் காதலை யேதரு நாரிக
டனக்கண் டேயவர் மாமய னீரினின்
மிதக்குந் தாகனை மோகனை வீணனை—முனிவோர்கள்

விருப்பஞ் சாலுற வாழ்த்தி யோடுபொன்
மணக்கும் மாமலர் தூவிய மேபணி
விளக்குந் தார்கழ லேதொழ நேர்மதி—தருவாயே

சதிக்குங் கோவென வாழ்நரி யோதன
வடத்துங் கோலவி யாயம தேயென
சமர்க்கஞ் சாதபல் வீரர்க ளோடவ—னமருடே

தாக்குன் றுமெனும் யானைகள் சூழ்வர
நடத்தன் றேர்விச யாதிப னேறிய
தழைக்குந் தேர்விடு மாதவ னுமரி—மருகோனே

திதித்திந் தோவென தோவென தானன
தனத்தந்தானன தானன தாவென
சிறக்குந் தாளமோ டாடிய மாசிவ—னருள்பாலா

சிறக்குந் தாமரை யோடையில் வாவியில்
நிறக்குங் கூர்வளை மாமணி காலுயர்
திருச்செந்தூர்வள மாநகர் மேவிய—பெருமாளே

---

(58) திருப்பழனி

தந்தன தந்தா தனனு தனதன
தந்தன தந்தா தனனு தனதன
தந்தன தந்தா தனனு தனதன—தனதானு

அண்டர்க ளுண்டா ரமுதோ நிறைநிறை
வண்டுக டம்பா மதுவோ கடன் முரா
சங்கரன்வண்டார் தருவோ முதிர்கனி—யதுதாமோ

அஞ்சுக குஞ்சோ குயிலோ வினிமையின்
விஞ்சிடு கண்டோ பலவோ கதலியி
னண்டிடு செந்தே னலமோ நிறைமன—மிகுமாவோ

பண்டுள தண்டோ வெனவே வுரைசொறு
லண்டிகள் கண்டார் மயலே கொளுதன
பம்பிக ளஞ்சா நடையோ டணிபெற—வருபேயார்

பந்திகள் கொண்டோர் நலமே பலமென
புந்திகு ழைந்தே தவியே யையுமிகு
பண்புட னின்று டனையே தொழுவர—மருள்வாயே

தண்டுள வன்று னமரா விருகட
லன்றதி னின்றோர் நகரார் தசரத
சம்பிர மனன்பார் சுதனு யொருமுனி —யிடமேகா

சண்டமி குந்தா டகைமா ளுற வொரு
வெங்கணை கொண்டோ ரிளமா னகலிகை
தன்பவ மும்போய் விடவே யருளிமி —தலை யேகி

வண்டுல வுங்கோ தையைமா கமலையை
யண்டர்பு கழ்ந்தே துதிகூ றிடமுன
மன்புமி குந்தே மணமே விய வரி —மருகோனே

வம்பவி ழுஞ்சோலையிலே மயினட
னஞ்செயு மஞ்சார் வுறவாழ் பழனியி
னம்பிய வின்பார்தொழவே வளர்வுறு—பெருமாளே

(59) திருவேரகம்

தனதனன தானதன தனனாத னத்ததன
தனதனன தானதன தனனாத னத்ததன
தனதனன தானதன தனனாத னத்ததன —தனதான

சரவணப வாகுமர குகனேச டைச்சிகையி
லரவமொடு மாநதியை யணிவோர்த மக்கரிய
சமையமறு வேயுதவு குருவேயெனத்தினமு மொழியாதே

சதிசெயதி மோசமுறு விழியால்ம ருட்டுபவ
ரனமெனவு மோசைபெற நடையேந டப்பராணி
தமதிருகைவீசிய மொழிபோலு ரைப்பர்பல—தெருவூடே

விரவிவரு காமுகர்த மருகேய ணுக்கிமலே
மூலியிற் சேலையொரு புறமேச றிக்கிவிழ
விரகமொழி பேசியவர்மனமேயு றுக்குபசரிதமோடே

விதவிதம தானசுக மனோமித ளிப்பவர்க
ளுனமொபாருளை யேகவரு மனமாதர் பற்றொழிய
யிகமகிழ்வி னொடுனதுபதமாம லர்ப்பணியை—யருள்வாயே

அரவமிக வேயசுரர் படையோடெ திர்த்தளவி
லிரவிமுன மாரிமமதெனவேம லேத்தமரி
லலகையொடுபேய்நரிகளொருகோடிசுற்றிவரவதன்மேலே

வளைகுடிலே காளிவயி ரவர்மாரி தார்க்கைநட
மிடவயிலே யேவிவிடு மொருவீர மிக்க குக
வரிய குமராசரவ ணாவவேல வுக்ரதர—மயிலோனே

சிரகமல மான்மருக வமராதி யர்க்கு வரு
துயரகல வேயுமையி னிடமேயு தித்து வளி
தெளுதினையின்மாவையுனுமழகாகரிக்குமரி யணைவோனே

செழியரசு வாழைபல நறுமாவு குத்த கனி
நதியிதென வோட வய லதிமேலமு ழாத்தபயிர்
தினமு விளை வாகிவருதிருவேர கத்திலுறை—பெருமாளே

---

(60) திருத்தணிகை

தந்த னந்தன தானன தானன
தந்த னந்தன தானன தானன
தந்த னந்தன தானன தானன —தனதானா

கொண்ட லங்கரு மாமண லோகுழல்
வண்ட லம்பிய வார்குழை யோசெவி
கொங்கை பம்பர மோமுடி யோசிமி —ழதுதானோ

குஞ்ச ரங்கனி யோவன மோநடை
யம்ப ரங்கடு வோவயி லோவிழி
கொஞ்சு மஞ்சுக மோகுயி லோமொழி—யதுதானோ

விண்ட யங்கிய மாமதி போமுக
மிந்தி ரன்றனு வோநுத லோரிடை
மின்று லங்கிழை யோவர வோவொரு —பிடிதானோ

மிஞ்சு செந்துகி ரோவிந்த மூர்த்தன
தந்த பந்திக ளோகமு கோவரி
மீண்டு கந்தர மாசினி யோதுடை —யெனவேதான்

கண்ட தும்பிய கோபிகள் நீலிகள்
வண்ட முண்டைக ளோரிக ளூரிகள்
கஞ்ச வஞ்சியி னசையி னூறதி —புரியாதே

கந்த சுந்தர னேகுகனே சிவன்
மைந்த சொந்தரி னூர் கழலாமிகு
கந்த பங்கய மீகவி யேசொல —வருள் வாயே

அண்ட ரும்புகழூரண நாரண
னெண்டருங்கலை மாமுனி வோர்களு
மன்புடன் றொழு தேவர வேகடற் —புவிமீதே

அம்பொ னிஞ்சியு மாமணி மாடமு
மும்ப ரந்துறையாலய மோடிக
வஞ்சமன்றவணி சாசல மேவிய —பெருமாளே

திருச்சோலைமலை.

(61) தானன தன்னன தந்தா னேதன
தானன தன்னன தந்தா னேதன
தானன தன்னன தந்தா னேதன—தனதான

வேலைவி னின்னமு தப்போ லேநிறை
பாலொடு கன்னலி ரசம்போ லேயுபர்
வீணையி னின்னிசை யப்போ லேமது—மழைபோலே

மேலவ ருண்ணுப மும்போ லேதினை
மாவினி தூள்ளவ ளம்போ லேசுக
மேவிய நல்லரு ளம்போ லேகுபி —ல துபோலே

காலையின் மன்னுமி னன்போ லேகலை
மானது தன்னிரு கண்போ லேமிகு
காசவிர் பொன்னணி யும்போ லேமணி—ய துபோலே

காசினி விண்ணினு யர்ந்தோ ரேமுத
லேவரு பெண்ணிம கிழ்ந்தோ மேயென
காலமு நின்னிரு பண்பா வேசொல —வருள்வாயே

வாலையின் வள்ளமு றும்பா லோடுயர்
ஞானமு முன்னமு னன்போ னேசுரர்
வாழ்வுற வின்னல்க ளைந்தோ னேசிவ—முருகோனே

வாலியி னுன்னைய முந்தே ருவவ
ளுவினை யுண்டவி டம்பா லேயெழு
மாமர முன்னடல் கண்டா னேர்பெறு—மருகோனே

மாலையி றுன்னிய விந்தா மேறுதன்
மாதர்க டன்னடை கண்டா ரோதிம
மாதுய ரென்னிந டந்தே தாமரை —மலர்மேலார்

வாவியு மின்னிக ரும்பூ வோடிள
வாழையு மென்மண முஞ்சேர் காவள
மாமலை தன்னி தங்கா வாழ்வுறு —பெருமானே

---

(62) ஆசிரிய விருத்தம்.

தாண்டவஞ் செய்தசிவ சங்கரன் பாலனே
சண்முக வைவேல குகனே
தாரணியை யோரடிய ளந்தமால் மருகனே
சங்கார வேல்மு ருகனே
சேண்டயங் கியவிந்த்ர தேவரா தியர்கவலை
தீர்த்தசிவ சுப்ர மண்யா
சேவலங் கொடியுடைய வாகினன் குடியிலுஞ்
சிலம்பிலும் வாழ்விசாகா
காண்டற் கரியதரி சனந்தந்த வள்ளலே
கதிர்மணி யிலான வொளியே
கந்தனே தேவரீர் மீதிலனு தினமுநற்
கவிமாலை சூட்டி னேன்யான்.
பூண்டயங் கியமார்ப னோராம சாமியைப்
புனிதமுட னாட்கொள் வாயே
பொற்பரங் கிரியில்வளர் தற்பரா வானவர்கள்
போற்றிடுங் குமர குருவே.

(63) இராகம்—பியாகு—தாளம்—ரூபகம்.

பல்லவி.

சரவணபவஹர ஹர சிவசண் முகாகுகா

அநுபல்லவி,

அரவணை துயிலரிமருகா
அநுதினமயில்மிசை வருக ஓம் (சரவ)

சரணங்கள்.

மவுனப்பிரணவ சோதிரூப
மணிவரைப்புயமணி நன்னிப
சவுனகாதிமுனிவர் ஸ்தோத்ர
தனிகையாம்வர திவ்யக்ஷேத்ர (சர)

சங்கரியம்பிகை யருளும்பாலா
சரணஞ்சரணந்தாசன் வேலா
துங்கமறைமுடி நடனப்பாதா
சோதிசொரூப நின்னருளைத்தாதா (சர)

தென்பரங்குன்ற நன்னகர்வாசா
தெய்வயானை வள்ளிநேசா
அன்பன்ராமசாமிசொல் கவிக்
கருள்செய்நீயனு தினமுமுதவிச் (சர)

---

(64) அச்சா மோரிலாக்கீஜே என்ற வர்ன மெட்டு

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

பல்லவி.

ப்ச்சை மயில் வாகனு பாலன் மீது கோபமா.

அநுபல்லவி.

நச்சரவஞ்சூடுமரன் நல்கிடுந்தயாபரனே
நாதாநன் னீதாநின் பாதமேபணிந்தேனே (ப)

தென்பரங்குன்றூர்குகனே தேவர்பணிதேசிகனே
செந்தூர்வாழ்கந்தாவுன்மைந்தனென்னையாளுவாய்(ப)

அன்பனெனும் ராமசாமி தண்டமிழுவந்தநேமி
அநுகூலம்போகமுன் னுகவா நல்யோகனே (ப)

(௬௫) இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி.

பல்லவி.

நெஞ்சமே யிந்த நிலையிலவாழ்வு நிச்சயமா.
நிதசற்பராவா புத்தி நர்பதமெய்த்துதிபுரியாமட (நெ)

அநுபல்லவி.

வஞ்சகத்தானவர் அஞ்சச்சுடர் மிகும்
வடிவேலினை விடுநாயக னடிமாமலர்முடிமீதணி (நெ)
மாயன் மருகனை நேயமொடு நிதம்
உருவாயருவாய்மோனகுருவேயெனமொழிவாய்தினம்
நாயபிராமி தருங்குமாரசாமி
சந்தா சலக்கந்தாயெனை வந்தாளெனுகந்தே மொழி (நெ)
மாமதுரக்கித வள்ளிமகிழ்நாதன்
மயில்சேவலோடயிலேந்திய வெயிலோன்றனைநினை
யா மூட (நெ)
ராமசாமிதன்னை ரட்சிக்கும் நீதனை
நதிவேணியற்கொருநாதனுய்வருபோதனைநினையாப்
பேதை (நெ)

என்னமோ மனதிலெண்ணி என்றவர்ன மெட்டு.

இராகம்—ஆனந்தபைரவி தாளம்—திரிபுடை

பல்லவி.

பன்னிருகர வேலனே பத்தர் கட்கனுகூலனே

அநுபல்லவி.

சென்னிமலை சன்னில் வாசாதெய்வயானைவள்ளிநேசா
வன்னிவிழிவந்த தேவாவன்னமயிலேறிவாவா(பன்னி)

சரணங்கள்.

பன்னகசயனமீது பள்ளிகொண்ட மால்மருகா
பத்தனெனையாள வாராய் பன்னிருகை வேல்முருகா
என்னை நீயாளாமல் வாதேனென்னிடம் செய்குவதோதே
என்றன்முறையுன்றன்செவிக்கேற்காததென்விப்போதே ப

சின்னவனையஞ்சலென்றுன்றிருவாய் திறக்கொணாதா
தேவதேவவிநெகன் குகா செப்புவாய் கமலப்பாதா
அன்னவயற் செந்தூர்க்கு காவய்யனேயறுமாமுகா
அன்பர்கள்பணிதாயகா அன்னைவள்ளியாள்நாயகா (ப)

காமத்தாற்புனத்திற்சென்றாய்கானில்வேங்கையாக நின்றாய்
கன்னியாள் தருமாதின்றாய் கத்தனே சூரரை வென்றாய்
தாமதஞ்செய்ய லாமாதாச னென்பழி வீண்போமா
சாதுவிளையாடலாமா சண்முகாகடப்பத் தாமா (பன்னி)

ராமசாமியான் றாமோரட்சிப்பதுவும் பாரமோ
நம்பினேனிதுவாரமோ நாதயீதன்று தாரமோ
மாமதுரமாகப் பாடும் பாமலருவந்து சூடும்
வல்லபிணியாலே வாடுமைந்தன்றுயர் தீர்க்காடும் (பன்)

---

(67) சுந்தரப்யாரி என்றவர்னமெட்டு.

இராகம் — தேசிகம் தாளம்— ஆதி.

கண்ணிகள்.

வந்தருள் வடிவேலா—வாலைமாதருளும் பாலா
வாலைமாதருளும் பாலா வானவர்பணிசுசீலா —வந்

இந்திரன் மகள் பாகாயின் றெனக்கருள் செய்யோகா
இன்றெனக்கருள் செய்யோகாஎழிலார்மயிலின் வாகா

சிவனுர்க்குபதேசனே தென்பரங்குன்றில் வாசனே
தென்பரங்குன்றில் வாசனே தெய்வானைதன் நேசனே

அவனியில்ராமசாமி யறையுஞ் செந்தமிழ்க்காமி
அறையுஞ்செந்தமிக் காமியருள் செய்குமாரசாமி —வந்

அருள்பரங்கிரிஐயனே என்ற வர்ன மெட்டு.

(68) இராகம்—தோடி—தாளம்—ரூபகம்

பல்லவி.

சரவணேற்பவ குகனே வுயர்
தாண்டவன்மகனேயெனை யாண்டிடுமறுமுகனே (சர)

அநுபல்லவி

உரகமிதுதுமின்றேன் மருகனை வொய்யாரா
உலகெலாமோர் நொடியில் வலமாய்வருமயூரா
உம்பர்பணிந்திடுஞ் சம்ப்ரமதீரா
கும்பமுனிக்கரு ளின்பவுதாரா
உரமேமிகு தானவர்வாழ்வுடனே
சிரமே விழவே யயில்மேல் விடுவோய்
ஓம் நமசிவபிரமனும் புகழ்ந்திடு லோலா
கானகத்திருக்குற மான்மகிழ்ந்திடு வேலா (ச)

சந்தவரை தன்னிலே வந்திடுங் குகநாதா
செந்தாமரை நேர்பாதாசிறி யெற்கருளொன்னுதா
சந்தரமின்மிது துதித்தேன் வருவாய் நீதா
மைந்தன் ராமசாமியை வாழ்விக்கும் நல்விநோதா

வந்தருள் வாய்தநி யெந்தன் முன்னாக
இந்திரனாருள் சுந்தரி மோகா
வனவேடுவனானவனே குமரா
குணவஞ்சகக் ரௌஞ்சவனின்னமரா
மாதவர் சேர்பரங்குன்றாரனே நிதமுமுந்தன்
பாதமதை யெந்தன் சிரமீதுபுனைகுவேன் சிவ (ச)

---

(69) இராகம்—மத்யமாவதி தாளம்—ஆதி.

பல்லவி.

தேவாதி தேவ சண்முகா செந்தில்வாழ்குகா (தேவா)

அநுபல்லவி.

வாவாசிறியேன் முன்னமரகத மயின் மிசை
மனமகிழ்வொடு முயர்வன சரர்மகள் மகிழ் (தேவா)

சரணங்கள்.

அமரர் சிறையகற்று மறுமுக குருபரா
அம்பிகையருளும் வேலணியும் பன்னிருகரா
அரிமுகனுங்கரி முகனோடு தாருக
நிருதனுமஞ்சிட வேமிகு போர்செய்து
அன்றச் சூரரை வென்றுக்கிர மொரு
கொன்றச் சத மகனன்றுற்றிடவே செய் (தேவா)

குமரனேயென் மனக்குறைகள் முற்றிலுந் தீர்ப்பாய்
கோதில்வரமளித்துப்போதில்வந்தென்னைக்காப்பாய்
குஞ்சரமாமுகனார் மகிழ்தம்பியே
நெஞ்சமதிற் பிணியானித வெம்பினேன்

கோமகனுப்முடி பூண்டவன் பாலனே
ராமசாமியெனையாண்டிடு வேலனே (தேவா)

ராமாநிஎந்தனைக் கைவிடலாமா என்றவர்னமேட்டு.

(70) இராகம்—கமாஸ் தாளம்—ஆதி.

பல்லவி.

கந்தா நீயெந்தனைக் கைவிடலாமா மிகக்
கருணைபுரிந்து யென்னைக்காக்கத் தாமதமாமா (கந்)

அநுபல்லவி.

சந்தா சலத்தில் வளர் சாமி சண்முகவென்றன்
சிந்தாகுலந்தவிர்ப்பாய் தேவாதிதேவனென்னும் (கந்)

சரணங்கள்.

தேவியுமைபயின்ற சேயா—தெய்வத்
திருமந்திரத்தைச் சிவன் றெரியவுரைத்தவாயா (தே)
ஆவினன்குடி யில்வளரையனே யடியேன்சிந்தை
மேவிமயில் மீது வரும் வேத ஞானபண்டிதநற் (கந்)

யானைமுகிற்கிளைய தேவா வெனை
யாதரித்தருள் தரவழகு மயின்மேல் வாவா (யா)
சோலைமழைக்கொந்தலவுந்தொல்பரங்குன்றூர்பரனே
தானையின்பதியென்றண்டர்சாற்றுஞ்செந்தூரில்வளர் (கந்)

மமாமரகதமயில் வாகா வேண்டும்
வரமருள் வள்ளி தெய்வானையிருவர் பாகா (மா)
ராமசாமிதாசன்றுதி நற்றமிழ்ப்பாமாலையொடுங்
கோமளக்கடப்பமலர்க்கோதையணிமார்பனேநற் (கந்)

நிகைவிட்த்தகுமா என்றவர்ன மெட்டு

(71) இராகம்—கல்யாணி தாளம்—ஆதி

பல்லவி.

வாமயூரமீதேறி வள்ளி
மாதுதெய்வ யானையுடன் (வா)

அநுபல்லவி.

சோமசேகரன்றன் வாமமார்சுதனே
தூரமோ யெனையாள்வது
பாரமோ சோதிவேலேந்தி (வா)

சரணங்கள்.

தென்பரங்கிரியி லன்புமேவிவளர்
தேசிகா குமரதேசிகா தெரிசித்
தன்பரோடுநித மும்பர்போற்றுகின்ற
ஆவினன்குடி மேவுமையனேயான்
பாவிநித்தமுனைக் கூவினேன்றன்முன் (வா)

முன்பரற்குரைசெய் தேசிகாவடிமை
முன்புவந்தருள்செய் வாய்குகா
என்பினோடரவு கங்கைதிங்கள்புனை
ஈசனார் மகனே பாசபந்தத்தினால்
தாசன்யானுமதிமோசம்போனேனென்றன் (முன்)

ஈசனே தணிகை வாசனே யமரா
ரிடர்தவிர்த்த குமரேசனே என்றுந்
தாசன் ராமசாமி நேசமோடுதுதி
தண்டமிழ்க்கருள் செய்பண்டயனைச்சிறை
கொண்டபழநிவாழ் தண்டபாணிஎன்முன் (வா)

பரங்கிரிவாழ் முருகையா என்றவர்னமெட்டு.

இராகம்—தோடி தாளம் சாப்பு (72)

பல்லவி.

கழுகுமாமலை வாழ் வேலனே
கங்கை பாலனே (க)

அநுபல்லவி.

பழுகனியுமெய்யா வன்பர்
போற்றிடும்பன்னி ருகையா
பழகு நல்லடியர் நன்னேயா
பார்வதி சேயா (கழு)

செந்திநகர் தன்னில் வாசா
தெய்வயானைவள்ளி நேசா
சந்திரசடாதரன் மகனே
தர்க்காவுங் குகனே (கழு)

அந்திபகலா யானே
அடிபணிகுவேன்சி மானே
தந்திமுகன் றம்பியே கண்பார்
தாசனை நீர் (கழு)

மாமயில் மீது வந்து
மைந்தனுக்கருள் புரிந்து
ராமசாமிநேய னென்னையே
ரக்ஷிப்பாய் நீயே (கழு)

விருத்தம்.

கஞ்சனைவதைத்த தேவக்கண்ணன்றன் மருகாகந்தக்
கஞ்சனைச் சிறையிலிட்ட கமலநேர்பாதா கந்தா
விஞ்சையர் முனிவர் போற்றுவிற்பன விமலருக்கு
விஞ்சையை முன்புகன்றவேலனே யருள்செய்வாயே.

வெண்பா.

வையா புரியா வளருங் குமரேசா
ஐயா யெனையே யாதரிக்க—ஒய்யார
மாமயி லிலேறி வருவீரிது சமயம்
தாமசம் செய்யாம லேதான்.

பராமுகமேனையா என்ற வர்ன மேட்டு.

(75) இராகம்—ஆனந்தபைரவி தாளம்—ஆதி.

பல்லவி.

வாரா யெந்தன் முன்னமே — மயிலின்மிசை
வாரா யெந்தன் முன்னமே (வாரா)

அநுபல்லவி

சூராதி சூரர்கள்சம் — மாராதுதிமிகு மொய்
யாராதோன்றுங் கடப்பந் — தாராசொல்லுமுதார
சூதா — யென்மேலின்னமும்
வாதா — சொல்லிடுமையா

மாதா தோன்றலே வருள்
தாதா நீதா விரைவில் (வாரா)

சரணங்கள்.

இந்தவுடம்பைமிகச் சொந்தமதாக நம்பி
கந்தாநின்பாத மலர்சிந்தனைசெய்கிலேன்யா
விசா தென்பரங்குன்ற
வாசா வெனது பவ
நாசா விந்திரன்மக
ளேசா தாசனுக்காக (வாரா)

சோமன் றலக்குசடை வாமன் றுதிகடுக்கைத்
தாமன் சோமசுந்தர நாமன் றரும்புனித
சுத்தா சொல்வது கேளெங்
கத்தா துதிபுரியும்
பத்தன் ராமசாமிவா
சித்த முத்தமிட்டீதா (வாரா)

---

(76) ஆசிரிய விருத்தம்

அந்திகையுங் கங்கையொடு தும்பையணி சங்கரன்
அனற்கணி லுதித்த குமரா
அரியின் மகளைச்சிறைவி தித்தமரர் சிறைநீக்கும்
அற்புத மிகுந்த வேலா
தந்திமதி யாலாத் மூலமே விரைவிலென்
சங்கடந்தீர்த்தி யென்றுஞ்

சமையமதி லக்கராவைக் கொன்று யானையைத்
தான்காத்த மால்மருகனே
செந்திலதி பதியென்ன வந்தவா நான்மறைகள்
தேடவரி தான பொருளே
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றில் வாசா
திந்திதிமி திமியென்ன நடமாடு மயின் மீது
தெய்வானை வள்ளி யுடனே
சிந்தைமகிழ் வாய்ராம சாமியென் முன்வந்து
தெரிசனந் தந்தருள் வையே.

ஸ்ரீசோமசுந்தரக் கடவுள் செய்த திருவிளையாடல்.

(77) ஆசிரிய விருத்தம்.

அந்தணன் றேவியைக் கொன்றகொலை பாண்டியற்
கனுகாம லருள விலையோ
வருமறையி னற்பொருளை முனிவர்நால் வர்க்கோதி
யையந்த விர்க்க விலையோ
செந்தமிழ்க் கீரற்கு நன்னூலி லக்கணந்
தெரியநீ செய்ய விலையோ
தேவிதன் னுரையினால் மலையத் துவசனைச்
செகமதில ழைக்க விலையோ
சந்ததமு நின்னையே துதி செய்தரு மிக்குவெகு
தனமளித் தாள விலையோ

தையலாள் வந்தியின் பிட்டுண்டு வைகையிற்
றுன்மண்சு மக்க விலையோ
சொந்தமாய் ராமசா மியையாண்டு துன்பந்
தொலைப்பது முனக் கரியதோ
சொன்னமய மாக வொளிர் மதுரைமா நகரில் வளர்
சோம சுந்தரக் கடவுளே.

---

(78) கோமகனு மாகநன் முடிசூடி யுலகமோர்
குடைநிழல் தன்னி லாண்டாய்
குண்டோத ரற்காக வையையொடு நல்லனக்
குழிதனையு நீயழைத் தாய்
மாமனுய் வந்தேவ முக்குரைத் தச்சபையில்
மங்கையாள் துயர் தவிர்த் தாய்
வரகுணற் காகநீ வாழ்கின்ற சிவலோக
வடிவினைக் காட்டி வைத்தாய்
நேமமிகு வாதவூ ரடிகளுக் காகவனம்
நின்றநரி பரி செய்தனை
நேர் வெள்ளி மன்றுட் பதஞ்சலி முனிவர்காண
நின்றுமா றியுநடித்தாய்
சோமனணி வோய்ராம சாமியெனை யாட்கொண்டு
துயரந் தவிர்ப்ப தரிதோ
சொன்னமய மாக வொளிர் மதுரைமா நகரில் வளர்
சோம சுந்தரக் கடவுளே

---

(79) மேகவா கனனுன விந்திரன் பழிதீர்த்து
மேன்மைதந் தாளவில்லையா
வெள்ளைவா ரணமதின் சாபமது தீர்த்தே
விளங்கவைத் திடவுமில்லையா
வேகமாய் வந்தவிட நாகத்தை யெய்துபின்
விடையதனை யெய்யவில்லையா
மேன்மையாய்க் கௌரிமாதிடர் நீக்கி யேயவள்
விரதமது காக்க வில்லையா
சோகமொடு துயர்தீர லிங்கங்கி ணறுவன்னி
துரிதமோ டழைக்க வில்லையா
சோதித்த சங்கப்ப லகைதந்து புலவோர்கள்
துன்பந் தவிர்க்க வில்லையா
தோகைபாக னேராம சாமியெனை யாட் கொண்டு
துயரந் தவிர்ப்ப தரிதோ
சொன்னமய மாகவொளிர் மதுரைமா நகரில் வளர்
சோமசுந் தரக்கடவுளே

---

(80) முத்தியது கொக்குக் களித்துமே யூர்க்குருவி
முழுமனதை யுங்க வர்ந்தாய்
மூதறிவொ டுன்பதஞ் சாரென்ற பாணன்றன்
முழுவினைய கற்றி வைத்தாய்
பத்தியாய்ப் பன்றியின் குட்டிகட்
கன்னையாய்ப் பாலும்புகட்டி வைத்தாய்
பாரமத வேழத்தை யெய்துமாய் கையின் வந்த
பசுவதனை நீவதைத்தாய்

சத்தியம தாய்மதுரை மாநகர மதிலேழு
சாகரமும் வரவழைத்தாய்
சமரதிற் பாண்டியன் சேனைதா கங்கெடச்
சலமதனை முன்னளித்தாய்
துத்தியர வப்பணியு நீராம சாமியென்
துயரந் தவிர்ப்ப தரிதோ
சொன்ன மயமாக வொளிர் மதுரைமா நகரில் வளர்
சோம சுந்தரக் கடவுளே

(81)அய்யனே மலயத்துவச ராஜகுமரியை
யருமணஞ் செய்ய விலையா
அப்பனைவதைத் தன்னையைச்சேர்ந்த பாதக
மகற்றி நியாள விலையா
செய்ய மாணிக் கம்விற்றபி ஷேகனுக்கன்று
திருமுடி யளிக்க விலையா
சித்தனுப் வந்து கல்லானை கற்கழையினைத்
தின்னக் கொடுக்க விலையா
உய்யவே வாதவூரடிகளை யிரட்சித்து
முண்மையாயாள விலையா
ஊதரிய பத்திரன்றபர் நிங்கவிறகுவிற்
றுயருமிசை பாடவிலையா
துய்யனே ராம்சாமியை யிரட்சித்தரிய
துன்பந் தவிர்ப்ப தரிதோ
சொன்னமயமாக வொளிர் மதுரைமா நகரில் வளர்
சோமசுந் தரக்கடவுளே

மங்களம்

(82) இராகம்—அபுரூபம் தாளம்—ஆதி

பல்லவி.

மங்களம் ஜெயமங்களம் மலரவன்வாணிக்கு (ம)

அநுபல்லவி.

சங்கரன் பாலனுக்கும் சத்திவடி வேலனுக்கும்
துங்கமுந் நூலனுக்கும்சுப்பிரமணியலோலனுக்கும் (ம)

வள்ளி தெய்வானையர்க்கும் வாரண மாமுகவர்க்கும்
வெள்ளி மலையில்வளர் விமலர்க்கும் பார்வதிக்கும் (ம)

லட்சுமி நாராயணர்க்கும் நால்வேத பாராயணர்க்கும்
பட்சமாக யிக்கீர்த்தனங்கள் பாடிவுடன்கேட்பர்க்கும் (ம)

மாமயிலின் வாகனனும் வள்ளிபங்கன் மீதுபத்திப்
பாமலர் மாலைகள்சூடும் ராமசாமி தாசனுக்கும் (ம)

சிலமிடுஞ் சென்னைநகர் சிதம்பரவள்ளலுக்கும்
தாலம்புரக்கு மைந்தாம் ஜார்ஜுமேரிதனக்கும் (ம)

இராஜ வாழ்த்து.

இராகம்—இந்துஸ்தான் தோடிதாளம்—ஆதி

நாகரீகமான விங்கிலீஷ் ராஜரீகமே சொல்
நாமிக்கணும்ராம சாமிக்கும் பேர்வைக்கும் நாளும்யோகமே
நத்துந்த பாலும் தந்தியுமில்லும் நலமுறும் ரைறஸ்கூலும்
இத்தரையோர்புகழ்காலேஜ்வைத்தியமினிமையேமென்மே
நலமுடன் செல்ரயில் கப்பலு மோட்டார் நாடவே [லும்]
நாம் கண்டோம் நாடவே நாம் கண்டோம் நாடவேநாம்
ண்டோம் பாடவே மகிழ் கொண்டோம் நல்ல (நா)

வாழி கலிவிருத்தம்

வாழ்க வந்தணர் வையகம் வண்மறை
வாழ்க வைவேல் குகன் மயில் வாரணம்
வாழ்க மன்னவர் வைசியர் சூத்திரர்
வாழ்க ரெட்டியர் மாநகர் வாழ்கவே

இந்நூற்பயன்

(73) ஆசிரியவிருத்தம்

வங்கமெறி கடலுலகில் மன்பதைக ளுக்கதிக
 வாமுறால் வாழ்வு மோங்க
மாநிலந் தனிலியான் சொன்னவிப் பத்திர
 மதுரநற் கீதந் தனை
துங்கமிகு பத்தியாய்க் கேட்டபேர் மிகவுநற்
 றுதியுடன் பஜனை செய்தோர்
சொல்லரிய வாணுளு ணிபெறுவர் மனையு நற்
 றேன்றலும் பெற்று வாழ்வர்
சங்கநிதி பதுமநிதி யென்னவுயர் செல்வமுந்
 தழைத்து மேலோங்கி வாழ்வர்
சண்முகன் பாதார விந்தமதி லிறுதியிற்
 றுன்வாழ்கு வார்நிச மிதே

நூதன
சிருங்கார சந்தவர்ன மெட்டுகே
ளடங்கிய
பக்திரசகீதாமிர்த சங்கீர்த்தனங்கள்.
முற்றுப் பெற்றது.

வள்ளியம்மை சுயம்வரம்.

இஃது வள்ளியம்மை மான்வயிற்றிற் ஜெனித்து குறவர்க்கரசனாகிய நம்பிராஜன் கிரகத்தில் வளர்ந்து கன்னிப் பருவங்கழித்து தக்கபருவநிலையடைந்து வனஞ்சென்று செந்தினைக்கதிரைப் பக்ஷிஜாதிகள் கொய்யாது காவல்புரிந்து நாரதமாமுனிவரோடு வாதுகூறிச் சுப்ரமண்ய வேடுவனோடு வாதுபேசிப் பண்டாரக் கிழவனோடு மனமகிழ்ந்து பரண்மீதிருந்து அன்னவருக்குத் தொண்டுசெய்து சுனையையடுத்து யானையாற் சிவசுப்பிரமண்யரை காந்தர்வமணம்புரிந்து தினைக்கதிரறுத்து அண்ணமார்களோடு சிற்றூர் சென்று குகனினைந்து துனைசோகித்துப் பின்னர்ச் சிவசுப்பிரமணியரைப் பாணிக்கிரகணஞ்செய்து திருப்பரங்குன்றஞ் செல்லுதல். இப்பாகங்களில் சாஸ்திரயுக்தப்படி நவரசங்களாலும் இந்துஸ்தான், பாரீஸ், ஜெகல், டோமரி, தாக்கா, சிந்து, கீர்த்தனை, கலிப்பா, வெண்பா, விருத்தப்பா ஓரடிப்பதம் முதலிய வர்ணமெட்டுகளினா லியற்றப்பெற்று ஆங்காங்கு ஐதிகப்படங்களமைத்து அச்சிட்டுத் தயாராயிருப்பதாலும் காப்பி சொற்பமாய் அச்சிட்டிருக்கிற படியாலும் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 0—12—0

விகடப் பிரசங்கம்.

ஓர் தமிழ் விகட நாடகம் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். வாசிக்க வாசிக்க வருத்தத்தை நீக்கிச் சந்தோஷத்தைக்கொடுக்கும். இப்புஸ்தகத்தில் விகடமடங்கியிருப்பதைப்போல் வேறுபுஸ்தகத்திற் பார்ப்பதறிது. நாடகபிரியர்கள் அவசியம் வாங்கவேண்டுவதுதான். கொஞ்சம் காப்பிகள்மட்டும் அச்சிடப்பட்டிருக்கிறது. வேண்டுவோர்களடியிற்கண்ட விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்புத்தகம் விலை அணா 0—8—0